
உ

" ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம் "

UNITED KINGDOM
கலசம்

# கலசம்
# KALASAM

தை - மாசி - பங்குனி 1996



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆத்மீகக் காலாண்டிதழ் £1.00



தென்னவன் சிவனின்
திருவருட்பயன் சொல்லும்
தெய்வீக எழுத்துக்கள்
எத்தனையோ அத்தனைக்கும்
எங்களது ஆத்மீக வணக்கங்கள்
அன்புநிறை வாசகர்களே!
எமது இனிய பொங்கல் வாழ்த்துக்களை
அன்போடு தெரிவித்துக் கொள்கின்றோம்.
இவ்வினிய வேளையில் உங்களுக்கொரு
நற் செய்தியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.கடந்த
பன்னிரண்டு கலசம் இதழ்களின்
தொகுப்பு நியாயமானவிலையில்
விற்பனைக்குண்டு.உடனே
கலசம் காரியாலத்துடன் தொடர்பு
கொண்டு உங்கள் தொகுப்பைப்
பெற்றுக் கொள்ளுங்கள்.

ஈசன் நெறி பரப்ப இன் தமிழ் வளர்ப்போம்

# கலசம்

மணி 4 ஒலி 13

தை - மாசி - பங்குனி 1996


## இப்போது என்ன செய்யப் போகிறோம்?

மனித உணர்வுகள் உறைந்துபோய் இருக்கின்ற நேரம். எதையாவது செய்ய வேண்டும் என்று மனம் துடித்துக் கொண்டிருக்கின்ற வேளை.
ஆனால் என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பிப்போய் அப்படியே சோர்ந்து போய் இருக்கிறோம். எங்கள் உறவினர்கள், சகோதரர்கள் பலர் வீதிகளில் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் ஏதாவது செய்தாக வேண்டும்.
விமர்சனங்களை விட்டுவிடுவோம். சரிபிழை பார்ப்பதை ஒத்திப்போடுவோம்.
இந்த நாட்டில் இருக்கக்கூடிய சங்கங்கள் யாவும் பேதங்களை மறந்து ஒன்று கூடுங்கள். அர்த்தமற்ற விடயங்களைக் கதைப்பதைவிட்டு நம் மக்களுக்கு நியாயமாக ஏன் நியாயமானதை விடக் கூட நிவாரணம் அளிக்கக்கூடிய விடயங்களைக் கதைத்து உடனடியாகச் செயலில் இறங்குங்கள்.
வீதியொன்றில் இருதமிழர்கள் கதைப்பதைக் கேட்டேன்.
ஒருவர் சொன்னார் " நாட்டிலை சனத்துக்குச் சரியான கஸ்டம். றோட்டுவழிய இருக்குதுகளாம்"
மற்றவர் சொன்னார்." அதுக்கென்னப்பா நாங்கள் செய்யிறது. அது அவையின்ரை விதி."
இரு ஸ்தாபனத் தலைவர்கள் உரையாடுவதைக் கேட்டேன்.
ஒரு ஸ்தாபனத் தலைவர் கூறினார். " உங்கடை ஸ்தாபனமும் எங்கடை மக்களுக்காகக் குரல் கொடுத்தால் என்ன?"
மற்ற ஸ்தாபனத் தலைவர் கூறினார்." இல்லைப் பாருங்கோ. நாங்கள் நடுநிலைமையாய் இருக்கிறம். உப்பிடியான வேலையள் செய்ய வேற ஸ்தாபனங்கள் இருக்கு. அவை செய்யட்டும்"
ஏன் இந்தத் துயரமான வாசகங்கள் இவர்கள் அதரங்களிலிருந்து வருகின்றன.?
எனக்குப் புரியவில்லை. உங்களில் யாருக்காவது புரிகிறதா? புரிந்தால் எனக்கும் சத்தமிட்டுக் கூறுங்கள்.
இப்பொழுதும் சொல்கிறேன். இன்னும் காலம் செல்லவில்லை. ஏதாவது செய்யுங்கள்.
உங்கள் ஸ்தாபனம்- எங்கள் ஸ்தாபனம் , நீ -நான் என்று நினைப்பதைவிட்டு எங்கள் மக்கள் என்று நினையுங்கள். புரிந்து கொள்வதும் புரிந்துணர்ந்து கொள்வதும் உங்கள் கடமை.
உங்களின் உடன் பிறப்புகள் அவர்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்வேண்டும்.
ஆலயங்களில் எல்லாம் எங்கள் மக்களுக்காகப் பூசைகள் நடைபெற்றன. எவ்வளவு சந்தோசமாக இருக்கிறது. செய்யுங்கள் தொடர்ந்து செய்யுங்கள்.

மு.நற்குணதயாளன்

ஆசிரியர்: மு. நற்குணதயாளன் துணை ஆசிரியர் : திரு க. ஜெகதீஸ்வரன்
நிர்வாகப் பொறுப்பு : திருவ.இ. இராமநாதன் , துணை நிர்வாகம் : திரு. சிவ. அசோகன்
ஆசிரியர்குழு:
திரு மாணிக்கம் சுரேஷ், திரு இ. முருகதாசன், திரு ந. சிவராசன்
திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம் , திரு சி. அற்புதானந்தன் , திரு பொ. சுந்தரலிங்கம்
**KALASAM, 2 SALISBURY ROAD, MANOR PARK, LONDON E12 6AB**
**ENGLAND TEL : 0181 924 8115**

# தைப்பொங்கல்



தைமாத முதல்திகதியில் சூரியன் மகரராசியில் பிரவேசிப்பதால் இதனை மகரசங்கிராந்தி என்பர். இத்தினத்தில் விஷேச சூரிய பூஜை வழிபாடுகளும் தர்ப்பணங்களும் செய்வர். மார்கழி மாதக் கடைசியாகிய தைப்பொங்கலுக்கு முதல் நாளில் பழையன யாவும் கழித்து வீடுவளவுகளைத் துப்பரவு செய்து போகிப்பண்டிகை என்ற பெயரால் தமிழகத்தில் கொண்டாடுவர்.

தை முதலாம் நாளிலே முற்றத்திலே பசுஞ்சாணத்தினால் மெழுகிக் கோலங்கள் இட்டு மூன்று கற்களை அடுப்பாக வைத்துப் புதுப்பானையில் பச்சரிசிப் பொங்கலிட்டுச் சூரியனுக்குப் படைப்பார்கள். பானைக்கு மஞ்சள், மாவிலை என்பன கட்டுவர். முழுக்கரும்பினை அருகில் நாட்டியும் மாவிலை தோரணங்களால் அவ்விடத்தை அலங்கரித்தும் சூரியபகவானை பிரார்த்தித்து இஞ்சி, மஞ்சள், கரும்பு, வெற்றிலை, பாக்கு, பழவகை என்பவற்றை நிவேதனம் செய்வர். கும்பம் வைத்து சூரியனை சாயாதேவி, உஷாதேவி சமேதராக ஆவாகனம் செய்து முறைப்படி பூஜிப்பதும் உண்டு.

புத்தாடை அணிதல், பட்டாக சுடுதல், வாண விளையாட்டுக்களில் ஈடுபடுதல் என்று மகிழ்ச்சியான கொண்டாட்டமாக யாவரும் இதனைக் கொண்டாடுவர். உயர்ந்த மரங்களில் அன்ன ஊஞ்சல் கட்டிப்பாடி ஆடுதல் இப்போது மறைந்துவிட்ட யாழ்ப்பாணக் கலாசாரங்களில் ஒன்று.

உத்தராயன கால ஆரம்ப நாளான தைமாதப் பிறப்பில அது வரை நிலவிய மழைக்காலம் குளிரும் கஷ்டமும் நீங்கி ஒரு புத்துணர்வும் "தைபிறந்தால் வழிபிறக்கும்" என்ற நம்பிக்கையும் உண்டாகின்றது.

தைப்பொங்கலை உழவர் திருநாள் என்று சொல்வர். உலகுக்கு உணவிடும் உழவர்
பெருமக்கள் உலக ஒளிக்கடவுளாகவும் உணவு சிறக்க உதவுபவருமாகிய சூரிய பகவானுக்கு நன்றி கூறி விழா எடுக்கும் நாள் உழவர் பெருநாள் தானே!

தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் பட்டிப்பொங்கல் உழவுக்கு உதவுவதுடன் நமக்கு வேண்டிய நிறை உணவையும் தருகின்ற மாடுகளுக்காகப் பட்டிகளைத் துப்பரவு செய்து அலங்கரித்து மாடுகளையும் நீராட்டி, மாலை, சந்தனம், முதலியவற்றால் அழகுபடுத்தி அங்கே பொங்கலிட்டுப் பொங்கலை மாடுகளுக்கு ஊட்டும் திருநாள் இது.

"அலகிலா மறைவிளங்கும் அந்தணரா குதிவிளங்கும்
பலகலையாந் தொகைவிளங்கும் பாவலர் தம்
பாவிளங்கும் மலர்குலாந் திருவிளங்கும் மழைவிளங்கும்
மனுவிளங்கும் உலகெலாம் ஒளிவிளங்கும் உழவருழும்
உழவாலே"

**கோப்பாய் சிவம்**

# மணி ஓசை

ஏழிசை பாடும் கோபுரம் மீதில்
இறைவன் கோயில் மணி ஓசை
நாழிகை தோறும் ஆசி வழங்கும்
நாதம் இசைக்கும் மணி ஓசை - ஏழிசை

ஐங்கரன் ஐங்கரன் ஐங்கர னென்றே
ஆடி ஒலிக்கும் மணி ஓசை
சங்கர சங்கர சங்கர னென்றே
சரணம் பாடும் மணி ஓசை - ஏழிசை

மங்கள மெங்கணும் பொங்கிடு மென்றே
வாழ்த்துப் பாடும் மணி ஓசை
தங்கிடு மெங்கள் நிரந்தரி சக்தி
தாயருள் பாடும் மணி ஓசை -ஏழிசை

கண்ணன் கண்ணன் கண்ணன் என்றே
கானம் பாடும் மணி ஓசை
விண்ணும் மண்ணும் ஓதும் கீதை
வேதம் பாடும் மணி ஓசை -ஏழிசை

வெல்லும் வேலின் வீரம் என்றே
வெற்றி முழங்கும் மணி ஓசை
சொல்லும் சரவண மந்திர கோசம்
சூழப் பாடும் மணி ஓசை - ஏழிசை

மாமணி கண்டன் மன்னன் சபரி
மலையைப் பாடும் மணி ஓசை
பூமணி அழகன் அரிஹர சுதனைப்
போற்றிப் பாடும் மணி ஓசை -ஏழிசை

பொங்கல் புரிந்து வணங்கும் உழவன்
புகழைப் பாடும் மணியோசை
எங்களை வாழ்த்தும் ஏர்முனை வாழும்
என்றே பாடும் மணியோசை- ஏழிசை


சூரிய நாதன் சோதியில் ஞாலம்
தொடரப் பாடும் மணியோசை
ஏரியில் இன்பம் வேண்டும் வேண்டும்
என்றே பாடும் மணியோசை -ஏழிசை

அஞ்சேல் அபயம் அபயம் என்றே
ஆறுதல் பாடும் மணி ஓசை
தஞ்சம் இறைவன் தாளிணை என்றே
தமிழிசை பாடும் மணி ஓசை-ஏழிசை

**-கவிஞர் ஞானமணியம்-**

# சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்

மு. நற்குணதயாளன்



## ஐந்து

இக் கட்டுரைத் தொடரின் ஐந்தாவது பிரிவு இது. இதுவரை சிவபுராணத்தின் எழுபது வரிகளின் பொருள் விளக்கத்தைப் பார்த்தோம். மாணிக்கவாசகர் சொல்லிய இந்தத் திருவாசகத்தினூடாக ஈசனுடைய பல செய்திகளைப் பகிர்ந்து கொண்டோம். ஈசன் யார் என்பதையும் அவனது பணிகள் என்ன என்பதையும் அவன் எப்படியானவன் என்பதையும் புரிந்து கொண்டோம்.

தொடர்ந்து . . .

*கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்*
*நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே*
*போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே*
*காக்கும் எம் காவலனே! காண்பரிய பேரொளியே!*

கூரிய மெய்யறிவால் உன்னை உணர்பவர்களும் தம்முடைய ஆய்வினால் ஆராய்ந்து அறிய முடியாத நுணுக்கத்திலும் நுணுக்கமான உணர்வே, இறப்பு, பிறப்பு, சேர்தல் எதுவுமிலாத இறைவா! என்றும் எம்மைக் காக்கின்ற மன்னவனே! காண முடியாத பெரும் ஒளிப்பிளம்பே! என்கிறார்.

இங்கு போக்கும் வரவும் என்பது இறப்பையும் பிறப்பையும் குறிக்கின்றது. இங்கு மாணிக்கவாசகர் காண்கின்ற இறைவனுடைய தன்மை எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது.

கூரிய மெய்யறிவு படைத்தவர்களால் கூட காணமுடியாத அளவுக்குரிய என் இறைவா நீதான் என் காவலன் என்று கூறும் மாணிக்கவாசகர் அடுத்த சொல்லில் காண்பரிய பேரொளியே என்கிறார். அதாவது அவரால் கூட அவனைக் காணமுடியவில்லை என்ற ஏக்கத்தை உணரக் கூடியதாயுள்ளது.

***ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற***
***தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்***
***மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்***
***தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்***
***ஊற்றான உண்ணார் அமுதே உடையானே***

அத்தா என்பது இங்கு அப்பா எனப் பொருள்படும். எல்லாவற்றுக்கும் மேலாக நிற்கின்ற இன்ப ஆற்றின் பெருவெள்ளமான அப்பனே! எந்தச் சொல்லுக்குள்ளும் அடங்காமல் தன்னைத்தானே விளக்கிக் கொண்டிருக்கின்ற ஒளிப்பிளம்பானவனே.! மாறிக்கொண்டிருக்கின்ற இவ்வுலகத்தில் தன்னை வேறு வடிவமாகப் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கின்றவனே! அறிஞனே! அறிவின் தெளிவே! என்னுடைய சிந்தனையுள் நல் ஊற்றாகச் சுரக்கின்ற உண்ண உண்ணத் தெவிட்டாத அமுதமே!

***வேற்றுவிகார விடக்குடம்பினுட்கிடப்ப***
***ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று***
***போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்***
***மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே***
***கள்ளப் புலக் குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே***
***நள்ளிருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே***

விகாரமான ஆசையில் நிரம்பிய இவ்வுடம்பில் வாழ்வதை இனிப் பொறுக்கமாட்டேன். என் இறைவா! சிவனே! என்று அழுது ஓலம் இட்டு உன்னைப் போற்றி அனுதினம் புகழ்ந்தவர்கள் எல்லோரும் மெய்வடிவம் பெற்றுவிட்டார்கள். என்னையும் அப்படி ஆக்கமாட்டாயா இறைவா? நாளும் பொழுதும் வஞ்சனை புரிகின்ற இவ்வுடலையே மாற்றும் வல்லமை படைத்தவனே நாமெல்லாம் உறங்குகின்ற நடு இரவில் கூட எழுந்து நின்று நடனம் ஆடுகின்றவனே மீண்டும் இவ்வுலகினில் பிறவாதிருக்க வரம் அருளமாட்டாயா? என்று இறைஞ்சுகின்றார்.

***தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே***
***அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று***
***சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்***
***சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்***
***செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்***
***பல்லோரும் ஏத்தப் பணிந்து.***

தென்திசைப் பாண்டிநாட்டிற்குரிய தில்லையம்பலத்தில் கூத்தாடுகின்றவனே, துன்பம் பிறவியை ஒழிப்பவனே, என்றெல்லாம் நாளும் பொழுதும் கூவி, சொல்லுகளுக்கே எட்டாத உயரத்தில் இருக்கின்ற சிவபெருமானின் புகழைச் சொல்லி அவன் திருவடிகளில் பணிந்து சொல்லப்பட்ட இப்பாடலை பொருள் உணர்ந்து சொல்பவர்கள் சிவபுரம் செல்வார்கள். சிவபெருமானின் திருவடிகளிலே என்றும் வீற்றிருப்பார்கள். இவர்களை எல்லோரும் பணிந்து வணங்குவர் என்று எவ்வளவு அழகாக முடிக்கிறார்.

இத்துடன் சிவபுராணம் பொருள் காணும் கட்டுரை முடிவடைகின்றது மாணிக்கவாசகரின் அரிய பொக்கிசமான திருவாசக மலையின் உச்சாணியாக இருக்கும் சிவபுராணத்தின் பொருள் விளக்கத்தையும் அவர் தம் சமூகப் பார்வையையும் முடிந்தளவுக்கு இலகு தமிழில் கூறியுள்ளேன் அடுத்து இத்தொடரில் திருவெம்பாவையைப் பார்க்கவுள்ளேன்.

அடுத்த தடவை திருவெம்பாவையுடன் சந்திப்போம்.

# தெய்வம் ஒன்று

கா. கதிர்காமத்தம்பி



திருக்கோயில்களில் சிவலிங்கம், தட்சணாமூர்த்தி, நடராசர், சந்திரசேகர், அம்பிகை, விநாயகர், முருகன், திருமால் என்ற பல மூர்த்திகள் இருப்பினும் அவைகள் அனைத்தும் ஒரே மூர்த்திதான்.

(1)

1. நெருப்பு – சிவபெருமான்.
2. நெருப்பிலுள்ள சூடு – அம்பிகை
3. நெருப்பிலுள்ள செம்மை – விநாயகர்
4. நெருப்பிலுள்ள ஒளி – முருகன்.

(2)

1. மலர் – சிவபெருமான்
2. மலரின் வடிவம் – அம்பிகை
3. மலரின் நிறம் – கணபதி
4. மலரின் மணம் – மயிலோன்

சிவபெருமானுடைய சக்திகள் நான்கு: அருட்சக்தி, போர்ச்சக்தி, கோபசக்தி, புருஷசக்தி

1. அருட்சக்தி – பார்வதி
2. போர்ச்சக்தி – காளி
3. கோபசக்தி – துர்க்கை
4. புருஷசக்தி – விஷ்ணு

*"அரியலாற் தேவியில்லை, ஐயன் ஐயாறனார்க்கே"*
–அப்பர் வாக்கு.

முக்கண்ணன்–முக்கண்ணி, சங்கரன்–சங்கரி, திரிபுரசுந்தரன்–திரிபுரசுந்தரி, என்பது போல் அரன்–அரி என வந்தது. ஆகவே திருமாலின் வழிபாடும் அம்பிகையின் வழிபாடும் ஒன்றெனக் காண்க.

*"யாரொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொருபாகனார் தாம் வருவர்"*
சிவஞானசித்தியார்

"ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கும் அருளும் தோன்றும்."
–அப்பர் திருவாக்கு.

ஒரு காகிதத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல் தெய்வத்திற்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று தட்பம், மற்றொன்று வெப்பம், வெப்பமும் தட்பமும் சமமாக இருந்தால் தான் மலர் மலராகக் காட்சி அளிக்கும். வெப்பம் மிகுந்தால் மலர் வாடும். தட்பம் மிகுந்தாலும் மலர் அழுகும்.

இந்த உடம்பும் சீதோஷ்ணத்தால் தான் வாழ்கின்றது. உலகிற்கு வெப்பமும் தட்பமும் மிக மிக இன்றியமையாதவை. வெப்பத்தின் நுண்மை சிவம். தட்பத்தின் நுண்மை திருமால். வெப்பத்தின் நிறம் சிவப்பு, தட்பத்தின் நிறம் பச்சை, எனவே சிவமூர்த்தி பவளம் போல் மேனியன், திருமால் பச்சைமாமலை போல் மேனியன். சிவம் அனல் ஏந்தி விளையாடுகின்றான், திருமால் ஆழியிடத்து துயில்கின்றான். சிவாலயத்தில் வெந்த நீற்றையும் விஷ்ணுகோயிலில் தீர்த்தப் பிரசாதத்தையும் வழங்குகின்றனர்.

பாதி–சிவம், பாதி–விஷ்ணு இந்தத் தத்துவத்தைச் சிவமூர்த்தங்கள் இருபத்தைந்தினுள் கேசவார்த்த மூர்த்தம் என்பது தெளிவாக்குகின்றது. சங்கரநாராயணர் கோயிலும் இதற்குச் சான்று.

"தாழ்சடையும் நீள்முடியும் ஒன்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்காணும் தோன்றுமால் –வீழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்
கிரண்டுருவம் ஒன்றாய் இசைந்து"

என்று ஆழ்வார் கூறுகின்றார்.

சிதம்பரம், திருநெல்வேலி, காஞ்சிபுரம், திருக்குற்றாலம், திருவருணை முதலிய திருத்தலங்களிலுள்ள சிவாலயங்களில் திருமாலும் காட்சி தருகின்றார்.

திருக்கோயிலில் காட்சியளிக்கின்ற துவாரபாலகர்களில் ஒருவர் ஆட்காட்டி விரலைக் காட்டி நிற்பது, உள்ளே வழிபடச் செல்வோருக்குக் கடவுள் ஒன்றே என்பதை வலியுறுத்துகின்றது. துவாரபாலகர் ஒரு கையை விரித்துக்காட்டுவது கடவுள் ஒன்றைத் தவிர வேறொன்றும் இல்லை என்பதை உணர்த்துகின்றது.

"ஏகம் ஏவ அத்வீதியம் பிரம்ம" என்று வேதம் கூறுகின்றது. கடவுள் ஒன்றேதான் இரண்டாவதில்லை என்பது இதன் பொருள்.

எனவே, தெய்வ வழிபாடு செய்வோர் தெய்வ பேதம் குறித்து மாறுபட்டு மலையாது நிலையான அன்புடன் ஒரு பொருளைத் தியானித்து வழிபடல் வேண்டும்.

நமது பொறிபுலன்களுக்கு எட்டாத நிலையில் இறைவன் எங்கும் வியாபகமாக இருக்கிறான். நாம் வணங்கும் வடிவத்தில் இறங்கி வருவதற்கு காரணம் அவனுக்கு நம்மிடம் உள்ள அருள். அவன் குறிகளும் குணங்களும் உடையவனாக வருவதற்கு மூலமான பண்பு அருள், இவை எல்லாவற்றுக்கும் மூலம் அருள் என்றே சொல்லிவிடலாம்.

அவன் வடிவு எடுத்து வருவதும், விளையாடல்கள் செய்வதும், வீரச் செயல்கள் ஆற்றுவதும், அடியார்களை ஆட்கொள்வதும் எல்லாமே இந்த அருளால் விளைவது. பொல்லாதவர்களை ஒறுப்பது கூட அருள்தான். அதை மறக்கருணை என்பார்கள். அவன் எது செய்தாலும் அருட்செயல் தான். தந்தை, தாய் தம் புத்திரர் சொல்வதைக் கேளாவிடில் தண்டிப்பர். இந்தநீர் முறையன்றோ ஈசனார் முனிவும். ஆகவே,

"நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே"

என்பதைக் கருத்திற் கொண்டு இறைவன் திருவருளை வேண்டி வழிபடுவோமாக.

திருச்சிற்றம்பலம்

## சிவலிங்கத்தின் தத்துவம்

சிவபெருமான் ஐந்து திருமுகங்களை உடையவர். அவற்றை முறையே ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்று சைவசமயம் குறிப்பிடுகின்றது.

ஈசானம் என்பது மேல் நோக்கிப் பார்த்தபடி இருக்கும்.

தத்புருஷம் என்பது கிழக்குத் திக்கை நோக்கியபடி இருக்கும்.

அகோரம் என்பது தெற்குத் திசையை நோக்கியபடி இருக்கும்.

வாமதேவம் என்பது வடக்குத் திசையை நோக்கியபடி இருக்கும்.

சத்தியோஜாதம் என்பது மேற்கு நோக்கிய திருமுகமாகும்.

# VARSHI'S FOOD STORE

## நியூமோல்டனில் ஒரு தமிழ்க் களஞ்சியம்



Speciality in All Srilankan , Indian and English Product under one Roof .

**Open Daily 8.00am - 11pm**

We stock all well known products likeGlobal, Samco, Larics, Leela and YKDAll News papers & Magazines including Asian papers & Magazines

**103 BURLINGTON ROAD,**
**NEW MALDEN, SURREY**
**KT3 4LR**

(Near Burlington Junior School)

**TEL : 0181 - 336 0061**

**SUPER STORE OPENING ON JANUARY AT 99 BURLINGTON ROAD**

# MARKANDAN & CO SOLICITORS

*Empowered to Administer Oaths*

Legal Aid

**Tamil House**
**720, Romford Road**
**Manor Park**
**London E12 6BT**

## M. MARKANDAN LLB

* ALL ASPECT OF IMMIGRATION MATTERS TO APPEALS TO EUROPEAN COURT OF HUMAN RIGHTS.
* ALL TYPES OF CONVEYANCING * LITIGATION * ALL COURTS CIVIL/ CRIMINAL
* LANDLORDS / TENANT MATTERS * MATRIMONIAL * POLICE STATION ADVICE
* ALL D.S.S AND HOUSING BENEFIT MATTERS
* FREE ADVICE FOR 15 MINUTES ON THE FIRST ATTENDANCE

LEGAL AID

*WE ARE ALWAYS FRIENDLY, EASY TO TALK AND KEEN TO HELP*

**TEL. : 0181 514 8188**

**FAX : 0181 514 8303**

# KUMARANS
# குமரன்ஸ்
தமிழ்க்கடை

**KUMARAN BOOK CENTRE**

KUMARANS

லீலா
தயாரிப்புகளின்
அங்கீகாரம் பெற்ற
விநியோகஸ்தர்கள்

அரிசிமா, குத்தரிசி,
மிளகாய்த்தூள்
மற்றும் பல
லீலா தயாரிப்புகளை எம்மிடம்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்


எம்மிடம் அரசியல்,
பொருளாதார புத்தகங்களோடு
பெருமளவிலான பிரபல
எழுத்தாளர்களின்
கதைப் புத்தகங்களும் கிடைக்கும்

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
**142-144 HOE STREET, WALTHAMSTOW,**
**LONDON E17**
**TEL: 0181 521 4955/ 0181 521 4411**
**FAX: 0181 521 9482**

எமது தொடர் கட்டுரை

# இந்துசமயம்

க. குணரத்தினம்



## தற்கால இந்து சமயம் 19ம், 20ம் நுற்றாண்டு

இந்து சமயம் அவ்வப்போது தன்னைப் புதுப்பித்துக் கொண்டே வந்திருக்கின்றது. இதன் காரணமாகவே இந்து சமயம் பன்னெடுங்காலமாக இருந்து வருகின்றது. உலகம் மாற்றமடைந்து கொண்டே வருகின்றது. சமூகமும் மக்களும் அவ்வாறே மாற்றமடைவது இயற்கை நியதி. வாழ்க்கை முறையும் சிந்தனைச் சூழலும் மாறுகின்ற பொழுது சமூக சமயக் கொள்கைகளும் நெறிகளும் மாறுதலடையத்தான் வேண்டும். ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு ஸ்மிருதி (சமயப்பணிகளைப் பற்றியும் தத்துவங்களைப் பற்றியும் அமைந்த நூல்) இருந்து வந்திருக்கின்றது. அதன் மூலம் காலமும் சூழ்நிலைகளும் மாறுபடும்போது ஒரு காலத்தே நடைமுறையிலிருந்த கொள்கை மற்றொரு காலத்துக்குப் பொருந்தாது என்பது புலனாகின்றது. இந்திய தத்துவஞானியும் இந்து சமயத்துக்கு

ஒரு பெரிய குரவராய் விளங்கியவருமான டாக்டர் ச. ராதாகிருஷ்ணன் பின்வருமாறு கூறுகின்றார். “கொள்கையிலோ நம்பிக்கையிலோ நிலையான ஒரே மாதிரியான மாற்றலாகாத இந்து சமயம் என்னும் ஒன்று ஒருபோதும் இருந்ததில்லை. இந்து சமயம் என்பது ஓர் இயக்கம். ஒரு நிலையிலேயே இருக்கின்ற ஒன்றன்று. அது ஒரு முறை முடிவன்று. வளர்ந்து கொண்டிருக்கும் நெறி. முடிவான கொள்கை விளக்கமன்று. சிந்தனையிலோ வரலாற்றிலோ ஏற்படக்கூடிய எந்த நெருக்கடியையும் சமாளித்து ஒரு சீராக இயங்கக்கூடியது அது என்பதையும் அதன் பழைய வரலாறு நமக்கு மெய்ப்பிக்கின்றது.”

ஆங்கிலேயர் 18ஆம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த போது இந்து சமயம் ஒரு தேக்க நிலையில் இருந்தது. 20ஆம் நூற்றாண்டு நடுப்பகுதியில் ஆங்கிலேயர் வெளியேறியபோது, இந்து சமயம் தன் உணர்வு, தன் நம்பிக்கை, தன் ஆதிக்கம், உள்ள ஒரு சமயமாகவும் உலகச் சமயமாகவும் மாறியது. இந்துக்கள் உலகின் பல பாகங்களிலும் பரந்துள்ளனர்.

இந்து இயக்கங்களையும் இந்து சமயாசிரியர்களையும் பல்லாயிரமலர்கள் போன்று உலகெங்கும் காணலாம். ஆங்கிலேயரின் ஆட்சியின் போது தொடர்பு சாதன விருத்தி, அச்சு இயந்திர அறிமுகம், இந்திய மொழிகளில் உரைநடைவிருத்தி என்பன ஏற்பட்டன. மேற்கத்திய கல்வி முறையின் பயனாக அறிவாளிகளின் புதிய சமூகம் ஒன்று தோன்றியது. அரசியல் உணர்வு, தேசியம், சுதந்திரதாகம் சுடர்விடத் தொடங்கின. கிறிஸ்தவ சமயம், பாதிரிமாரின் செயற்பாடு என்பனவற்றிற்கு எதிராக இந்து சமயத்தினுள்ளே புத்துணர்வும் புத்தூக்கமும் ஏற்பட்டது. அதன் பயனாக இந்து சமயத்தில் மாபெரும் மாற்றம் நிகழ்ந்தது.

## ராம் மோகன் ராய் (1727-1833)

இந்து சமய மறுமலர்ச்சியின் தந்தை என்று இவர் கருதப்படுகின்றார். செல்வாக்குள்ள வங்காளப் பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். ஆங்கிலக்கல்வி கற்ற இவரை மேல் நாட்டுக் கலாசாரம், விஞ்ஞான சிந்தனை என்பன கவர்ந்தன. தர்க்க ரீதியாக இந்து சமயத்தை அணுகினார். கல்வித்துறையிலும் சமூகப் பழக்க வழக்கங்களிலும் சமய நெறிகளிலும் சீர்திருத்தங்களைப் புகுத்தினார். ஆண்கள், பெண்கள் இருபாலாரும் கல்வி கற்கவென ஓர் ஆங்கில இந்துக்கல்லூரியை கல்கத்தாவில் நிறுவினார். உருவ வழிபாடு, அவதாரக் கொள்கை, சமயக் கிரிகைகள் என்பனவற்றை எதிர்த்தார். சதி என்ற உடன்கட்டையேறும் (இறந்த கணவனுடன் ) பழக்கத்துக்கெதிராக ஒரு இயக்கமே நடாத்தி அதனை 1829 இல் சட்டரீதியாக ஒழிக்கச் செய்தார். ஒரே கடவுட் கொள்கைமுறையில் மக்கள் விளக்கம் பெற, உபநிடதத்தை அடிப்படையாகக் கொண்ட சமயத்தைப் பரப்புவதற்கு பிரம்ம சமாசம் என்ற ஸ்தாபனத்தைத் தோற்றுவித்தார். பிரம்ம சமாசத்தில் உபநிடதவிளக்க வகுப்புகளும் தெய்வீகப் பாடல்களும் பாடப்பட்டன.

## தேவேந்தரநாத் தாகூர் (1817-1905)

இவர் நோபல் பரிசு பெற்ற உலகப் புகழ் வங்கக்கவி ரவீந்திரநாத் தாகூரின் தகப்பனாராவர். ராம் மோகன் ராய்க்குப் பின்னர் பிரம்ம சமாசத்தின் தலைவராக இருந்து வழிநடத்தினார். கூட்டுப்பிரார்த்தனை முறையை ஆரம்பித்தார். வேத நூல் சம்பந்தமான வகுப்புக்கள் நடாத்தப்பட்டனவெனினும் வேதங்கள் ஆன்மீக அதிகாரமுடையவை என்பதை அவர் ஏற்கவில்லை. பகுத்தறிவுக்கும் மனச்சாட்சிக்கும் முதன்மை தரப்பட்டது. உபநிடதத்திலும் வேறு சமய நூல்களில் இருந்தும் தெரிவு செய்த பகுதிகளை உள்ளடக்கிய பிரமதர்மம் என்ற தொகுப்பு நூலைத் தயாரித்து சமாசத்தின் புனித நூலாக உபயோகித்தனர். தேவேந்திரநாத் தாகூர் ஒரு பக்திமானாகவும் ஒருமையாளராகவும் விளங்கி எல்லோராலும் மகரிஷி என்று அழைக்கப்பட்டார்.

## கேசப் சந்திரசென் (1838-1884)

இவ்விளம் தீவிர சீர்திருத்தவாதி 1857இல் பிரம்ம சமாசத்தில் சேர்ந்து தலைமைத்துவத்தில் ஒருவரானார். நடைமுறையிலுள்ள சமயச் சடங்குகளை எதிர்த்து அவற்றிற்கு மாற்றாக சமாசமே சில சடங்குகளை நடத்தி வைக்க ஏற்பாடு செய்தார். சாதிமுறை, பூனூல் அணிதல், என்பனவற்றையும் எதிர்த்தார். மிதவாதிகளுக்கும் சென்னுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டதால் சென் சமாசத்தில் இருந்து வெளியேறி இந்திய பிரம்ம சமாசம் என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்தார். பல சமய நூல்களிலும் இருந்து தெரிவு செய்த பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு நூலை ஆன்மீக நூலாக இப்புதிய சமாசம் பயன்படுத்தியது. வங்காள பக்தி இயக்கத்திலிருந்தும் சில அம்சங்கள் அவர்கள் வழிபாட்டில் சேர்க்கப்பட்டன. இந்துப் பெண்களின் நிலையை உயர்த்தல், சிறுபிள்ளை விவாகத்தைத் தடைசெய்தல் போன்றவற்றிற்கு பேரியக்கங்கள் நடாத்தப்பட்டன. சாதிக்கலப்புத் திருமணம், விதவை மறு திருமணம் என்பனவற்றை இவரது சமாசம் நடாத்தி வைத்தது. சென் ஆரம்பித்த சமாசம் மீண்டும் பிளவுபட்டது. 1884இல் அவர் இறந்ததும் அவர் ஆரம்பித்த சமாசமும் செயலற்றுப் போய்விட்டது. பிரம்ம சமாசம் வங்காளத்திலும் வேறு நிலையங்களிலும் இந்துக்களின் கவனத்தை ஈர்த்தது. பிரம்ம சமாசத்தின் பல இயக்கங்கள் வெற்றி பெற்றன. பிரம்ம சமாசம் நடாத்தி வைத்த திருமணங்கள் சட்டரீதியாக ஏற்கப்பட்டன. சாதிக்கலப்புத் திருமணம், விதவை மறு திருமணம் என்பன நடாத்தி வைக்கப்பட்டன. சிறு பிள்ளைத் திருமணங்கள் சட்டரீதியாக தடைசெய்யப்பட்டன. தனிப்பட்ட இந்துவைப் பொறுத்தும் இந்து சமுதாயத்தைப் பொறுத்தும் சமயம் சம்பந்தமான உணர்வும் விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டது.

(தொடரும்.....)

## அருள் விருந்து

### சுவாமி சித்பவானந்தர்

நமக்குத் துன்பங்களை உண்டாக்குபவர் நாமே.

நடுவுநிலைமை எய்துவது பெருமை.

செய்யும் செயலில் சிந்தை செலுத்துபவன் யோகி.

தன்னை அறிந்தவன் உலகத்தையும் அறிவான்

கடவுளின் கிருபை பணிவுடையவனை நாடுகிறது.

சீரிய புலனடக்கமே மேலான நாகரீகம்.

கடமையைக் கடவுள் வழிபாடாகக் கருதுதல் அறம்

சன்மார்க்கம் எல்லோருக்கும் உறுதி தருவது.

அரிசி அன்னமாவது போல் மனிதன் சித்தனாகிறான்

பேசிக்கொண்டிருந்தால் பெருவாழ்வு கிட்டாது.

சீரிய சிந்தனையால் மௌனம் உண்டாகின்றது.

கபடமுள்ளவனுக்குக் காரியம் நிறைவேறாது.

அறத்துக்கு முரண்பட்டவை அழிந்து போகும்.

அடக்கமுள்ள சான்றோரைத் துயரம் ஒன்றுஞ் செய்யாது.

தெய்வத்துக்கு அஞ்சுபவன் வேறெதற்கும் அஞ்சான்.

தூயஉள்ளத்தில் வெறுப்புத்தன்மை வேர்விடுவதில்லை.

துன்பங்கள் வருவதால் மனிதன் சீர்திருத்த மடைகின்றான்.

எண்ணத்துக்குத் தக்கதாக வாழ்வு அமைகிறது.

நான் என்னும் அகந்தையை விடுவதே பெரிய பேறு.

பொறாமை மனித மேன்மைகளைத் தேய்த்து விடுகின்றது.

இயற்கையை மீறி எவரும் நடக்க முடியாது.

மனப்பண்பாடே வாழ்க்கையின் முக்கிய நோக்கம்.

நெறியான வாழ்வில் நேர்மை அனைத்தும் உண்டு.

பற்றற்றவனை வினைத்தளைகள் ஒன்றும் செய்வதில்லை.

தன்னை இறைவனுக்குக் கொடுத்தவனே உயர்ந்தவன்.

தொகுப்பு : ராணி

# ஸ்ரீ பாலசுப்பிரமணியர் தோற்றமும் தத்துவமும்

சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் சுப்பிரமணியர் இரண்டாவது மகனாக அவதரித்தார். கார்த்திகேயன் என்னும் பெயர் பெற்ற சுப்பிரமணியர் இந்து புராணத்தில் ஏனைய தெய்வங்களின் உருவத் தோற்றங்களைப் போன்றே ஆழ்ந்த மறைபொருளாக நிற்கின்றார். சுப்பிரமணியர் பரம் பொருளாக நிற்பதுடன் அப்பரம் பொருளைத் தேடும் ஒருவர் செல்ல வேண்டிய பாதையையும் காட்டி நிற்கிறார்.

மனித உருவில் சண்முகம் ஆறுமுகங்களுடன் காட்சி தருகிறார். அவர் நீல நிறத்தவர். அவர் கையில் வேலை ஏந்தி நிற்கிறார். அவரின் வாகனம் மயில். மயிலோ அதன் கால் விரலால் பாம்பைப் பற்றியபடி இருக்கின்றது.

முடிவற்ற ஒரு பொருளை நாம் நீல நிறத்தால் குறிப்பிடுவோம். இயற்கையின் தோற்றங்களான வானமும் கடலும் மனிதருக்கு நீல நிறமாகவே தோன்றுகின்றன. ஆகவே சுப்பிரமணியன் மனித ஆன்மீக வாழ்வில் முடிவற்ற உண்மையாகத் திகழ்வதை அந்நீல நிறம் காட்டுகின்றது. ஒரு மனிதரிடத்தில் இருக்கும் இந்த உயர்ந்த உண்மை, ஐம்புலன்கள் மூலமும் மன அறிவுப் புலன்கள் மூலமும் வெளிவருகின்றது. இந்த உண்மையினையே ஆண்டவனின் ஆறு முகங்கள் காட்டுகின்றன. மறைபொருள் தனித்து எதனையும் வெளியிடுவதில்லை. இத்தோற்றம் பல முகப்புகளுடைய நவரத்தினம் தனது பற்பல முகங்களின் வழி ஒளியைப் பிரதிபலிப்பது போன்று தோன்றுகின்றது.

மேலும், சண்முகனின் மயில் வாகனமும் நீல நிறத்தினதே. மயிலின் மற்றொரு இயல்பு தற்பெருமையாகும். உயிர் வர்க்கங்களில் தற்பெருமைமிக்க ஒன்றை மயில் பிரதிபலிக்கின்றது. அது எவ்வளவு இறுமாப்புடன் தோகையை விரித்து மகிழ்ந்து ஆடுகின்றது.

ஆன்மீக உண்மையைத் தேடுகின்றவர், தான் என்ற இறுமாப்பு எய்துவர் என்பதைக் காட்டுகின்றது. அதாவது ஆன்மீக உண்மையைத் தேடுபவர் தானே தூய்மையான ஆன்மாவினை உடையவர் என்றும், தானே கண்டு உணர்ந்து சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர் என்றும் எண்ணுவர். இக்கருத்தினையே கார்த்திகேயனின் மயில் வாகனம் குறிப்பிடுகிறது. மனிதனை வழி நடத்திச் செல்லும் வாகனமாக இயங்குவது அவனுடைய ஆணவமே. இது அவனுடைய தனித் தன்மையை ஓரளவே உணர உதவுகின்றது. மனிதனின் இடைவிடாக் கவனம் அவனது உடல் மனம் , அறிவு ஆகியவற்றின் மீதே இருக்கின்றது.

உடல் நிலையில் உணர்ந்தறியாதவனாயும் மனநிலையில் உணர்பவனாயும் அறிவு நிலையில் சிந்தனையாளனாயும் தான் இருப்பதாக மனிதன் நம்புகின்றான். ஆகவே, தன்னை உணர்ந்தறிபவனாயும் உணர்பவனாயும் சிந்தனையாளனாயும் நம்பித் தருக்குறுகின்றதன் மூலம் தன் ஆன்மீக வளர்ச்சியை மந்தப்படுத்திக் கொள்கின்றான். இங்ஙனம் செய்வதன் மூலம் கட்டுப்பாடற்ற ஆன்மீக வளர்ச்சி பெறுவதற்கான தன் ஆற்றலை மனிதன் உணராது போகின்றான். கார்த்திகேயனின் சிலை, மனித உள்ளத்தில், தான் என்ற தற்பெருமையை எழுப்புவதன் மூலம் ஆன்மாவின் முடிவற்ற தன்மையைக் காட்டுகின்றது. எவன் ஒருவன் உடல், மனம், அறிவு ஆகிய தேவைகளைக் கவனிக்கும் பணிகளை விட்டு தனது ஆன்மீக உண்மையின் எல்லையற்ற தன்மையை உணர்கிறானோ அவனே

நீலவண்ண கார்த்திகேயனாக பூமியில் மனித உருவில் தெய்வமாகின்றான்.

இச்சிலை, உண்மையைத் தேடும் ஒருவர் எவ்விதம் உடல் தேவைகளை உதறிவிட்டு ஆன்மீக உண்மையை அடைவது என்பதற்கான அனுபவபூர்வமான வழிகளையும் காட்டுகின்றது. மயில் தன் கால்விரலால் பாம்பைப் பற்றிக்கொண்டிருப்பது காட்டுவது அதுவேயாகும். பாம்பின் பெரும் வைரி மயிலாகும். வேண்டுமென்றால் மயில் பாம்பைக் கொன்றுவிட முடியும். எனினும் அதனைக் கொல்லாமலே அடக்கி கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளது. தனது புறத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளத் தூண்டும் ஆணவத்தையே பாம்பு பிரதிநிதிக்கிறது. ஆத்மீக ஒளியினை உணராது அறியாமை என்ற இருளில் பாம்பைப் போன்று மனிதரின் ஆணவம் ஊர்ந்து செல்வதையே இது காட்டுகின்றது. பாம்பு தனது பற்களில் நஞ்சைச் சுமந்து சென்ற போதிலும் அதனை அந்நஞ்சு பாதிப்பதில்லை. அது தன்னைக் காத்துக்கொள்ள பிறர் மீது நஞ்சைப் பயன்படுத்துகின்றது. அங்ஙனமே ஆணவம் தன்னுடனே எடுத்துச் செல்லும் நஞ்சு மனம் ஒருவரின் புறத்தேவைகளின் மீது செலுத்தப்படுத்தப்படும்போது "நான்" "எனது" என்ற நிலையை உருவாக்குகின்றது. அதே எண்ணம் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தப்படும் போது உடல் மனம் அறிவு என்ற பாதைகளின் வழி ஆன்மீக உண்மையை உணர முடிகின்றது. இதன் வழி ஒருவர் தனது உண்மை இயல்புகளைக் கண்டு பிடிக்கவும், உணரவும் முடிகின்றது. ஆகவே ஆணவம் அழிக்கப்படலாகாது. உலகின் பலதரப்பட்ட புறத்தேவைகளின் பகட்டிற்கு நம் கவனத்தை ஈர்க்கும் அதே ஆணவத்தை, ஆன்மீக உணர்வுகளைப் பெருக்கும் மார்க்கங்களில் திசை திருப்பிவிடலாம். மயில் பாம்பை உறுதியாகப் பற்றி இருப்பது இதனையே காட்டுகின்றது.

தன் ஆன்மீக நிலையை உணர்ந்து விட்ட ஒரு நேர்மையான மனிதனையே சுவாமி சுப்பிரமணியர் பிரதிநிதிக்கிறார். தனது முடிவற்ற நிலையை உணர்த்தவே தன் கையில் "சக்தி" வேலுடன் அவர் காட்சி தருகின்றார். அழிக்கும் ஆயுதமான வேலை ஏந்தி நிற்பது நமது ஆன்மீக சக்திகளைக் குறைக்க வரும் எதிர்ச்சக்திகளை அடியோடு அழிக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

**பார்த்தசாரதி**

## குறித்து வைக்கவேண்டிய தினங்கள்

15-01-96 தை தாதப் பிறப்பு, தைப் பொங்கல்
16-01-96 ஏகாதசி விரதம்
18-01-96 பிரதோஷ விரதம்
20-01-96 அமாவாசை விரதம்
23-01-96 சதுர்த்தி விரதம்
25-01-96 ஷஷ்டி விரதம்
29-01-96 கார்த்திகை விரதம்
31-01-96 பீம ஏகாதசி விரதம்
2-02-96 பிரதோஷ விரதம்
4-02-96 பூரணை விரதம், தைப்பூசம்
13-02-96 மாசிமாதப் பிறப்பு
15-02-96 ஏகாதசி விரதம்
16-02-96 பிரதோஷ விரதம்
17-02-96 சிவராத்திரி விரதம்
18-02-96 அமாவாசை விரதம்
22-02-96 சதுர்த்தி விரதம்
24-02-96 ஷஷ்டி விரதம்
25-02-96 கார்த்திகை விரதம்
01-03-96 ஏகாதசி விரதம்
02-03-96 சனிப்பிரதோஷ விரதம்
04-03-96 மாசி மகம், நடேசர் அபிஷேகம்
05-03-96 பூரணை விரதம்
14-03-96 பங்குனி மாதப்பிறப்பு
15-03-96 ஏகாதசி விரதம்
17-03-96 பிரதோஷ விரதம்
18-03-96 போதாயன அமாவாசை
19-03-96 அமாவாசை விரதம்
23-03-96 சக்தி கணபதி சதுர்த்தி விரம்
25-03-96 ஷஷ்டி விரதம்
30-03-96 ஏகாதசி விரதம்

-அமுதா-




# சிறுவர் கலசம்

Beginning with this issue we are effecting a welcome change in the section devoted to children, The pages containing features and articles for children and by children are so placed in the middle of the magazine as to enable children to remove those pages and save them so that they could eventually bind them in the form of a booklet. It is our desire to increase the number of pages in children section from eight to twelve. This depends on the enthusiasm the children show. We wish to know the views of children and parents on this matter. We wish our young readers, writers and artists a prosperous new year 1996 and a Happy Thai Pongal.

-Editorial Board-

# ESSENTIAL ETHICS OF THE TAMILS

## ULAGA NEETHI
## (உலக நீதி)
## OR
## Universal words of wisdom

Ulaga Neethi is an ethical work in the Tamil language. The author of this work is known as Ulaganathan . Not much is known about the author. It would appear that he has been a devout devotee of Lord Murugan. There are thirteen verses in Ulaga Neethi of which the last one alone sheds some light on the life history of the author. Let us learn those Tamil verses and their English translations .

### ONE

The first verse reads as follows-

"ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்.
வாகாரும் குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே."

The above verse may be translated as follows.
(a) Let not a day pass without learning.
(b)Speak not evil of any one.
(c) Don't ever forget your mother.
(d)Don't associate with doers of evil.
(e)Avoid going to forbidden places.
(f)Don't engage in backbiting.
(g)Oh You heart! greet and pray to the rider of peacock who is the Lord of Valli.

### TWO

The second verse in the Tamil language reads as follows.
நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
நிலையில் லாக்காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே ஒரு நாளும் பழக வேண்டாம்.
நல்இணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்.
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்.
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்.
மஞ்சாரும் குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

**S. SRISKANDARAJAH**

The translation of as above verse is the follows-
(1) Don't tell any lie wilfully
(2) Don't try to maintain that which cannot be sustained.
(3)Do not deal with poison or drug for whatever reason.
(4)Do not befriend people who are not in good company.
(5) Think twice before going on roads that are unfamiliar and lonely.
(6)Don't betray those that trust you.
(7)Oh you heart! please pray to Lord Murugan theLord of Valli.

### THREE

The third verse in Ulaga Neethi is as follows.
மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்.
மாற்றானை உறவென்று நம்பவேண்டாம்.
தனம் தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்.
தருமத்தை ஒரு நாளும் கெடுக்க வேண்டாம்.
சினம் தேடி அல்லலையும் தேட வேண்டாம்.
சினந்திருந்தார் வாசல்வழிச் சேர வேண்டாம்.
வனம் தேடும் குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே!!


The above verse may be translated into English language as follows-
(1) Do not go the way of your mind without restraint.
(2)Trust not an enemy as your ally.
(3)Save not by starving only to lose all to others.
(4)Don't block the course of righteousness.
(5)Don't give way anger so as to Court trouble.
(6)Reach not the door steps of those that burn with hate.
(7) Oh You heart! Please pray to Lord Murugan , the Lord of Valli.


### FOUR


The fourth verse reads as follows:-
குற்றம் ஒன்றும் பாராட்டித் திரியவேண்டாம்
கொலைகளவு செய்வாரோடு இணங்கவேண்டாம்
கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டாம்
கற்புடைய மங்கையரைக் கருதவேண்டாம்
கொற்றவனோடெதிர்மாறு பேசவேண்டாம்
கோயில் இல்லாஊரில் குடியிருக்கவேண்டாம்
மற்றுநிகர் இல்லாதவள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே
The English translation of the above Tamil verse can be given as follows:-
(1) Do not harbour ill feelings towards those that have harmed you.
(2) Don't associate with murderers and thieves.
(3) Despise not the learned and wise.
(4) Do not covet married women.
(5) Do not argue with the sovereign
(6) Live not in a village that has not a temple.
(7) Oh you heart! Praise Lord Murugan the partner of the

To be continued.....

# THIRU NAALAI POAVAAR







Nandanar was a Pariah ( untouchable ) by caste. He was born in Adanoor in the Chola kingdom. He was an embodiment of humility and devotion. Lord Siva was his sole refuge. He would often visit the holy places of pilgrimage, and supply leather drums and such other musical instruments for the temples. When he went near the temples, he always remained outside and worshipped the Lord mentally.

Once he had a desire to have Darshan of the Lord at Thirupunkur. He was also eager to do some service to the Lord there. He went to Thirupunkur and stood in front of the temple. He was grieved because Nandi which is always in front of the Lord was hiding Him. Nandanar prayed to the Lord fervently. The Lord was highly pleased with his devotion and asked Nandi to move a little so that Nandanar might have His Dharshan. Even today, at Thirupunkur, Nandi is leaning to one side! Nandanar had a delightful Dharshan of the Lord. After constructing a tank near the temple he returned to Adanoor.


The desire now arose in him that he should go to Chidamparam and have Dharshan of Lord Nataraja. The love of the Lord had grown so itense that he would shed tears of love and tell his com panions: " I will surely go to Chidamparam tomorrow". This expressionearned for him the name Thiru Nalai Povar ( one who would go tomorrow ). One day he actually left his place and went to Chidamparam. He went round the village and thinking of his low birth did not want to enter it. He prayed: "Oh Lord, I want to see your Cosmic Dance in Your Nritya Sabha, but how can I? On account of my low birth they will not allow me to enter the temple". For days he went on praying like this. The Lord, pleased with his devotion, appeared in his dream and said: "Oh noble soul, do not grieve. You will come to Me. Take a fire bath. Then come to My Kanaka Sabha along with the Brahmins". Nandanar woke up and was highly pleased. At the same time, the Lord appeared before the Brahmins of Thillai, in thei r dream and said: "Oh Brahmins, My dearest devotee, Thiru Nalai Povar has come to Thillai. Prepare a sacred fire. Nandanar will take a bath in it and come to Me".

The next day, the Brahmins prepared the sacred fire. They went to Nandanar, prostrated before him and related their dream. Nandanar went round the fire, and with his name on his lips and his mind fixed on the lotus feet of the Lord, he jumped into the fire. He emerged from the fire with a new holy body, with sacred ashes smeared all over, the holy thread and matted locks. He was then taken inside the temple. In the Kanaka Sabha, he worshipped the Lord. He went into a divine ecstasy and was completely absorbed in the dance of the Lord. A dazzling light was seen in the room and Nandanar has disappeared. He had become one with Lord Nataraja.


# SRI RAMAKRISHNAR

(CONTINUATION FROM LAST KALASAM)

AFTER SPENDING SOME PEACEFUL DAYS AT GAYA, KSHUDIRAM RETURNED TO HIS VILLAGE. CHANDRAMANI NARRATED TO HIM HER DIVINE EXPERIENCE.



GADADHAR'S BROTHER RAMKUMAR WAS RUNNING A SANSKRIT SCHOOL IN CALCUTTA. SEEING THAT GADADHAR WAS WHILING AWAY HIS TIME, HE TOOK HIM TO CALCUTTA SO THAT HE COULD ASSIST HIM AND ALSO DEVOTE HIMSELF TO STUDIES. BUT HERE TOO GADADHAR SHOWED NO INTEREST IN SECULAR EDUCATION.




A FEW MONTHS PASSED. RAMKUMAR TOOK UP THE POST OF A PRIEST IN THE KALI TEMPLE AT DAKSHINESWAR BUILT BY RANI RASAMANI. GADAI ALSO STAYED WITH HIM. FINALLY GADAI TOO BECAME THE PUJARI OF TEMPLE OF MOTHER KALI. IT WAS A SIGHT TO WATCH GADAHAR PERFORMING PUJA. IT WAS AT DAKSHINESWAR THAT HE CAME TO BE KNOWN AS RAMAKRISHNA.



MOTHER KALI WAS NOT A MERE IMAGE TO HIM. HE KNEW THAT MANY HOLY MEN IN THE PAST HAD SEEN FACE TO FACE THE GOD. HE IN GREAT AGONY PRAYED TO THE MOTHER TO REVEAL HERSELF TO HIM. HE COULD FEEL AT THE TIME OF WORSHIP MOTHER HERSELF WAS PRESENT IN THE IMAGE.

**To Be Continued . . .**

# WORSHIP

K. GUNARATNAM

Worship means the reverent love and loyalty accorded to a deity, Idol or sacred object; a set of ceremonies, prayers or other forms by which this love is a expressed.

There are three forms of worship namely Domestic worship ( home), Temple worship and Congregational worship ( group).

In Domestic worship an area is set aside in the home and maintained in a state of purity. The Ishtathevathai or preferred deity is represented by an image (Idol), some symbol or poster. Offerings, singing of devotional songs, humble and earnest prayers, meditation and arathi are performed. Worship is done after a bath but before meals in the morning and evening. The extent of worship depends on the availability of time to individual members of the household. However a few minutes in the morning and evening, the whole family taking part in worship once or twice a week and on auspicious days is generally in practice. It is very desirable that all Hindus pay importance to introducing the children to this worship at home.

Temple is a place dedicated to the presence of a deity and for religious worship. Temple is called Kovil or Alayam in Tamil. Kovil means the place where god resides. Alayam means the place where the soul or aanma seeks refuge in God. There are two old Tamil sayings on the importance of Temple. One saying is " worshipping in a Temple is very desirable and good." The other saying is " do not reside in an area where there is no Temple." This is because the Tamil people believed that Temple is an ideal place for worship. Religious worship, they thought, helps a person and the society to lead a life of "tharma" and spiritual advancement. In fact Temples are found in every village and the Hindus are building Temples wherever in the world they reside.

Temples are sacred places. For generations saints and devotees have spent their time praying, medi tating and performing poojas in the Temples. This makes the Temples more sacred and spiritual. Temple is filled with the grace of God. Just as you can quench your thirst in a fresh water spring or well, you can quench the thirst 'bakthi' in a Temple. In a cow there is milk in a latent form in all parts of its body but the particular spot at which it gives its milk is its teat. Similarly the omnipresent God grants his blessings to his devotees through the image or idol they worship in the Temple. Cotton wool does not catch fire in Sunlight. But when a lens is interposed between the sunlight and cotton wool the sun's rays are focused on the cotton wool and it now catches fire. In a similar way the grace of God ignites our heart of cotton wool, the idol functioning as a lens. In the Temple the idol helps a person to concentrate his thoughts on the deity and surrender to God. The love, spiritual power and blessings flood forth from the deity to the devotee. After worship a person finds harmony and peace within himself. Temple worship is for everyone, at every level of spiritual development. We never outgrow Temple worship. It simply becomes more profound and meaningful as we progress through the different spiritual levels.

Worship is done for ones own welfare and also for the welfare of others in the family or community at large. The Saiva saints Appar, Gnanasampanthar and Suntharar went from Temple to temple, sang devotional songs (thevaram) in praise of God and involving people in the bakthi movement. They had experienced visions of God. They sought the help of God whenever they had problems of their own and also on behalf of others in distress. Their prayers are always answered positively. We can find evidence of these in the Thevarams ( garland of hymns) sung by them. Thiruvasakam sung by Saint Manikavasakar also gives instances where God came to his help. It is quite in order to pray to God to help us out of our problems, to achieve success in our undertaking or make a vow. After all he is the king of kings and we have right to a approach him and humbly request for help. But we must have unfailing faith in him and work hard. God will help to strengthen our resolve and achieve success. When we achieve success we must be humble enough to announce that our success is due to the grace of God and also not fail to thank him for it. We must also worship God on behalf of others well being, be they family members, friends or the community at large, when they are in distress. That will be a great virtue of a saivite.

# சிறுவர் வரைந்த சித்திரங்கள்



**தர்சனா நவேந்திரன்** (7 வயது)
மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை (கிங்ஸ்பரி பிரிவு)



**தீபன் தர்மராசா**

## நான் வளர்க்கும் வீட்டுப்பிராணி

நான் வளர்க்கும் வீட்டுப்பிராணியின் பெயர் றோசி. றோசி என்றால் என்னவென்று நீங்கள் நினைப்பீர்கள். அது ஒரு நாய்க்குட்டி. நான் றோசியை ஒரு வயதில் இருந்து வளர்த்து வருகின்றேன். றோசியின் நிறம் கறுப்பு. றோசி நான் பாடசாலைக்குப் போய் வரும் வரை வாசலில் காத்திருக்கும். என்னைக் கண்டதும் வாலை ஆட்டி என் மீது துள்ளிக் குதிக்கும். பின்பு நான் அதைக் கூட்டிக்கொண்டு விளையாடப் போவேன். நான் றோசிக்குக் கடையில் சாப்பாடு வாங்கிக் கொண்டு வந்து கொடுப்பேன். றோசியை நான் என்னுடைய அறையில் படுக்க வைப்பேன். என்னுடைய செல்லப்பிராணி றோசிக்கு என் மீது மிகுந்த விருப்பம்.

துசியந்தினி பூபாலசிங்கம் - வயது 14.
புறூக்டோர்ப் தமிழ்ப்பாடசாலை
சுவிற்சிலாந்து.

## என் தாய் நாடு

என் தாய் நாடு இலங்கை. அங்கு அழகான மலைகளும், ஆறுகளும் உண்டு. மழைவளம், மண்வளம் உண்டு. எங்கள் நாட்டில் நெல்லும், தேயிலையும், பனையும் நிலையாய் ஓங்கும் நாடு. மாணிக்க வளமும் உண்டு. அங்கு பல இன மக்கள் வாழ்கின்றார்கள். பல இன மக்கள் நண்பர்களாய் பழகியே வாழ்வது எம் நாடு. நம் நாட்டில் கோயில் கோபுரங்கள் அழகாகவும் உயரமாகவும் கட்டப்பட்டிருக்கும். நான் எங்கள் நாட்டையே விரும்புகின்றேன்.

சத்தியமூர்த்தி கார்த்திகா
வயது 12
புறூக்டோர்ப் தமிழ்ப் பாடசாலை(சுவிற்சிலாந்து).

## நான் விரும்பம் பெரியார் ஔவையார்

நீதி நூல்கள் பல எழுதி தமிழுக்குத் தொண்டு செய்தவர் ஔவைப்பாட்டி. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, ஆகியவை அவர் எழுதிய சிறப்பான நூல்கள். சிறியவர்களுக்கும், பெரியோருக்கும் அவை இன்றும் பயன் தருகின்றன. தமிழ் உள்ளளவும் அவரது நீதியும் சிறப்பும் நினைவில் நிற்கும். அவரது சேவையைப் போற்றிப் பாராட்டி வருவது தமிழர்களின் கடமையாகும்.

சொரூபா.
(சுவிற்சிலாந்து)

**THE THREE GURUS**

God is one. Wise men know him by many names!

The name given to the power of God that created is Brahma. Guru Brahma plants the seeds of love, courage, knowledge, Truth - all good and pure
vales in us.
God's power that fosters and nurtures is named Vishnu.
Guru Vishnu looks after the needs of the good seed. plants need water, sunshine and manure to ensure healthy and steady growth. In the same way, Vishnu gives us the necessary wealth of material needs, health, knowledge and courage to live by truth and loveGod's power that destroys in order to protect, to maintain the balance in creation is
named Siva. Plants have to be protected from weeds, pests and grazing animals. Only then can the plant grow into a tree in whose shade the same animals now find cool comforts. So too Gurudevo mahesvara has to destroy the laziness that binds us tightly to our old selfish ways. He burns away the darkness of ignorance thus giving wisdom.

**Vinothan Visakan ( 10 Years)**

# அணங்கினர் அவை

**அணங்கினர் அவையை இறையருள் பெற்ற மகளிரும், இறையடியார்களின் அருட்கனிவில் திளைத்தும் நம்மவர்களால் அறியப்படாத மாதரும் பொலிவிப்பர். அவற்றுடன் பெண்கள் விரும்பும் கலைகளும் அதில் சிறந்து விளங்கிய பாடல்களும் சிறு குறிப்புகளும் அலங்கரிக்கும்**

**- சாலினி-**

பொங்குருச் செல்வங் கல்வி பொருவிலா வாய்மை, தூய்மை
இங்கெமக் கருள வல்ல இணையிலா எம்பி ராட்டி
பங்கயத் தடஞ்சூழ் கூடற் பவளமால் வரையை நீங்கா
அங்கயற் கண்ணி மங்கை அடிக்கம லங்கள் போற்றி

- திருவிளையாடற்புராணம் -

# மனைவி என்னும் அருளமுதம்



"நறை சேர் மலர் ஐங்கணையான்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடப்பட்டவன் காதலின் கடவுளான மன்மதன்.

மன்மதனுக்குச் சங்கத் தமிழர்கள் விழா எடுத்தனர் என்பதனை

"வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுது" என வரும் பாலைக்கலி அறியத்தருகின்றது. காமன் விழா ஏழு நாட்கள் நடைபெற்றமையும், காமன் கோட்டம் (கோயில்) சோலையின் நடுவில் கட்டப்பட்டிருந்தமையும், அங்கு திருமணமாகாத கன்னியர் சென்று வழிபட்டனர் என்பதையும், அவர்கள் நோன்பு நோற்று நல்ல கணவன்மாரைப் பெற்றனர் என்பதையும் ஐம்பெருங்காப்பியங்களால் அறியமுடிகின்றது.

ஆனால் ஆண்டாள் தன் பாசுரங்களில் காமனை வேண்டியது போல் யாரும் வேண்டியதாகத் தெரியவில்லை. ஆழிமழைக் கண்ணனே தனக்குக் கணவனாகக் கிடைக்க வேண்டும் என்ற பேரவாவால் மன்மதனைக் கைதொழுகின்றாள்.

"தை ஒரு திங்களும் தரை விளக்கி . . .
. . . வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே (504)

என்றும் "சுவரில் புராண நின் பேரெழுதி . . .
. . . தொழுது வைத்தேன் ஒல்லை விதிக்கிற்றியே"
(507)

என்றும் மன்மதனை அவள் வழிபட்ட முறையை அவளே தனது திருமொழியில் குறிப்பிடுகின்றாள். காத்தற் கடவுளான கண்ணனை அடைய ஆண்டாள் காதற் கடவுளான காமனின் காலில் விழுவது புதுமையாக இருக்கின்றது. அதுவும் தை மாதம்



முழுவதும் புதுமணல்–நுண்மணல் கொண்டு வந்து தெருவை அலங்கரித்து, மண்டல பூசைக்காக மேடையமைத்து, கிழக்கு வெளுக்கு முன் எழுந்து நீராடி, எறும்பும் முள்ளும் இல்லாத சுள்ளிகளை எடுத்து தீ வளர்த்து நோன்பிருந்து, சுவரில் மன்மதனை அவனது பரிவாரங்களுடன் கீறி, கரும்பும், வெல்லமும், பச்சையரிசியும், அவலும் சமைத்து அவனுக்குப் படைத்து, தூமலர் தூவித் தொழுது,

". . . மானிடவர்க்கென்று பேசப்படில்
வாழ்கிலேன் கண்டாய் மன்மதனே"

எனப் பாடுவதும் சிந்திக்கற்பாலது.

"பிரமன் ஊர்வசியைப் படைத்திருக்கமாட்டான். அவன் வேதமந்திரம் சொல்லும் ஒரு ஜடம். ஒரு ஜடத்தால் எப்படி அவளைப் படைக்க முடியும்? எனவே அவளைப் படைத்தது மன்மதனாகத்தான் இருக்க வேண்டும்" என்று காளிதாசர் குறிப்பிடுகின்றார்.

காதற் கடவுளாகவும் ஒரு விதத்தில் படைத்தற் கடவுளாகவும் சொல்லப்படும் மன்மதனின் வாழ்வைக் கொஞ்சம் பார்ப்போம்.

பிரமன் உலகைப் படைக்கத் தொடங்கிய காலத்தில் அவனால் படைக்கப்பட்டவர் எல்லோரும் ஞானியராக இருந்தனர். இதனைக் கண்ட திருமால் தனது மானச புத்திரனாக மன்மதனைத் தோற்றுவித்து உலக உற்பத்திக்கு வழி செய்தார். ஈழத்தின் மாந்தை மன்னன், மயனின் புதல்விகளான ரதி, பிரக்ரதி இருவரையும் இவன் திருமணம் செய்தான். இராவணனின் மனைவி மண்டோதரியின் உடன் பிறப்புக்களே இவர்கள். (ரதி பாற்கடல் கடைந்த பொழுது வந்தவள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. மன்மதனை மானசபுத்திரனாகத் திருமால் தோற்றுவித்த பொழுது லட்சுமி உடன் இருக்கின்றாள். அவள் விருப்பத்திற்காக அவளம்சமாக திருமால் சாமனையும் தோற்றுவித்தார். எனவே மயன் புதல்வி என்பதே பொருந்தும். பாற்கடலிடைப் பிறந்தவள் லட்சுமி.) இராவணனும் மன்மதனும் மகரக்கொடி (மீன் கொடி)உடையவர்களாக இருந்திருப்பது இங்கு கவனிக்கற்பாலது.

தக்ஷனை அழித்த பின், சிவன் உமையைப் பிரிந்து தவம் செய்தார். உமை, பர்வதராசன் மகளாக, பார்வதியாகப் பிறந்து தவம் செய்தார். சூரபத்மனின் தொல்லை பொறுக்க முடியாத தேவர்கள் திருமாலிடம் முறையிட்டனர். சிவன் தவத்தை விடுத்துப் பார்வதியை மணந்தால் சூரனை அழிக்க ஒரு குமரன் பிறப்பான் என்றார் திருமால். இதனால்

மன்மதனை அனுகிய தேவர்கள் சிவனின் தவத்தைக் கலைத்து பார்வதி மேல் மோகம் கொள்ளச் செய்யுமாறு வேண்டினார்கள். காமனும் சிவனின் மேல் காமக்கணை தொடுத்தான். சிவனும் தன் தவநிலை கலைந்து, அவனை தனது நெற்றிக் கண்ணைச் சிறிது திறந்து நோக்கினார். அவன் எரிந்து சாம்பலாகினான்.

இதனை இராவணன் தனது சிவதாண்டவ தோத்திரத்தில்

"கராளபால பட்டிகா தகக் தகக் தகக் ஜ்வலத்
தநஞ் ஜயாதுீக்ருத ப்ரசண்ட பஞ்ச சாயகே.. . ."

அதாவது விழித்த நெற்றிக் கண்ணின் தக தக தக எனப் பிரகாசிக்கும் அக்கினியினால் மன்மதனை எரித்தவர் என்கின்றான். திருநாவுக்கரசரும்,

"காமனையுங் கண்ணழலாற் காய்த்தார் . . ."
என்கின்றார்.

மன்மதனின் மனைவி ரதி கணவன் சாம்பலானது கண்டு துடிக்கின்றாள். சிவனிடம் வழக்குரைக்கின்றாள். உலகம் உய்யும் பொருட்டு கணை தொடுத்த தன் கணவன் செயல் (மன்மதனின் தொழில்) தப்பல்ல என்பது அவளின் வாதம்.

"பழித்திளங் கங்கை சடையிடை வைத்து
பாங்குடை மதனனைப் பொடியாய்
விழித்து அவன் தேவி வேண்ட முன் கொடுத்த
விமலனார் . . ."

எனச் சம்பந்தர் கோணேஸ்வரப் பதிகத்தில் குறிப்பிடுகின்றார். அழகிய மன்மதனை சாம்பலாக்கி அவன் மனைவி (ரதி)இரந்து கேட்குமுன் கொடுத்தவிமலராம்.

ஆனால்

"இரதியன்னாட்கு உருவமாய் இருத்தி ஏனை
உம்பரொடு இம்பர்க்கு எல்லாம்
அருவினனாகி உன்றன் அரசியல் புரிதி "
என்னும் கந்தபுராணப் பாடலுக்கு அமைய, ரதியின் கண்களுக்கு மட்டுமே அவன் சுயஉருவில் தெரிவான். மன்மதனும் தன் மனைவியெனும் அருளமுதத்தால் உயிர் பெற்று அனங்கனாக வாழ்கின்றான்.

பின் குறிப்பு–

திருக்குறுக்கை என்னும் இடத்தில் காமனை சிவன் எரித்தார். இது மயிலாடுதுறையில் (மாயவரம்) இருந்து மணல்மேடு செல்லும் வழியிலுள்ளது. இப்பொழுது இவ்வூரை கொறுக்கை என்கின்றார்கள். இது அப்பரால் பாடல் பெற்ற தலம். இத்தலத்தில் மட்டுமே மன்மதனுக்கும் ரதிக்கும் செம்பாலான சிலைகள் உள்ளன. மற்றைய இடங்களில் சிலா(கல்) வடிவங்களே உள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி, கிருஷ்ணாபுரம் என்னும் இடங்களிலுள்ள சிலைகளைப் பார்க்க கண்கோடி வேண்டும். அவ்வளவு எழிலார்ந்த சிலைகள் இன்றும் திருவண்ணாமலை திருநெல்வேலிப் பகுதிகளில் காமதகன விழாவும் காமனை உயிர்ப்பிக்கும் விழாவும் நடைபெறுகின்றன. ஊரின் பொது இடத்தில் உள்ள மேடையில் (காமுட்டி கோயில்) கரும்பை நட்டு அதைக் காமனாகப் பாவித்து அதனை எரித்து வழிபடுகின்றனர்.

## ஆசையை அடக்குவோம்

**இன்பம் இடையறாது ஈண்டும் அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம் கெடின் (குறள் 369)**

**துன்பங்களிலெல்லாம் கொடியதுன்பமாகிய ஆசை என்னும் துன்பம் இல்லாது போனால், இந்த உலகத்தில் இடையறாத இன்பமாகிய பேரின்பத்தை அனுபவிக்கலாம். எவ்வளவு கிடைத்தாலும் அடங்காத் தன்மையுள்ளது ஆசை. அதை அடக்கிவிட்டால் அப்போதே பிறப்பில்லாத பேரின்ப நிலை வந்துவிடும்.**



# பாவை நோன்பு

பாவையராகிய பெண்கள் பாவை பிடித்து வைத்துக் கொண்டாடிய நோன்பே "பாவை நோன்பு" எனப்பட்டது. பாவை நோன்பு நோற்கும்



பெண்கள் "பரவை" என அழைக்கப்பட்டனர். ஔவையார் "காப்பது விரதம்" "நோன்பென்பது கொன்று தின்னாமை" எனக் கூறி இருப்பினும் விரதம், நோன்பு இரண்டினதும் குறிக்கோள் ஒன்றே. இதனை,

"வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம் ஈண்டு முயலப்படும்." என்னும் குறள் வலியுறுத்துகின்றது.

பாவை நோன்பு, பயன் கருதியே கன்னிப் பெண்களால் கொண்டாடப்பட்டது. நாடு செழிக்க மழை பெய்யவும், பெருமை மிக்க நல்ல கணவன்மார்களை அடையவும் கன்னியாம் காத்தியாயினியை நோக்கி கன்னியர்களால் நோற்கப்படுவதே இந்நோன்பு.

கன்னிப்பெண்கள் மார்கழி மாதத்தில் அதிகாலையில் துயில் எழுந்து ஏனையோரையும் அழைத்துச் சென்று ஆற்றில் நீராடி ஆற்றங்கரை மணலால் மலைமகள் உருவம் (பாவை) செய்து மலர் தூவி வழிபடுவர். இதனை அப்பர்,

'தழைதத்தோர் ஆத்தியின் கீழ்த் தாபரம்
மணலாற்கூப்பி" என்கின்றார்.

மார்கழி மாதத்தின் திருவாதிரை நட்சத்திரத்திற்கு முன்வரும் பத்து நாளும் இந்நோன்பை நோற்பர். மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில் திருவாதிரை அன்று இந்நோன்பு நிறைவுறும். இந்நோன்பு மதசார்பு அற்றதாக கன்னியர் வழிபாடாக நடந்துள்ளது. அதற்கு மணிவாசகரின் திருவெம்பாவையும் ஆண்டாளின் திருப்பாவையுமே சாட்சி. ஆண்டாள் இந்நோன்பை எப்படி நோற்பது என்ற விபரத்தை தனது திருப்பாவையில் "வையத்து வாழ்வீர்காள்!" என அழைத்து, நாமும் நம் பாவைக்குச் செய்யும் கிரியைகள் கேளீரோ எனச் சொல்கின்றாள்.

"பரமனடிபாடி, நெய்யுண்ணோம், பாலுண்ணோம்,
நாட்காலே நீராடி மையிட்டு எழுதோம், மலரிட்டு நாமுடியோம்,
செய்யாதென செய்யோம், தீக்குறளை சென்றோதோம்,
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறு எண்ணி உகந்து"
(நாட்காலே—விடியற்காலையிலே)

மார்கழி நீராடி நோற்பதால் இந்நோன்பை "மார்கழி நீராடல்" எனவும் அழைப்பர். தைத்திங்களில் ஆடும் நீராடல் "தைந்நீராடல்" என அழைக்கப்பட்டது. இதுவும் உலகமாதாவான மலையம்மையை வணங்கி தன்னைப் பெற்ற தாயுடன் சென்று நீராடுவதால் "அம்பாஆடல்" என்றும் அழைக்கப்பட்டது.

"அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்" எனவரும் பரிபாடல் வரி, சங்ககாலத்தில் இருந்தே கன்னியர் இந்நோன்பை நோற்றனர் என்பதை உறுதி செய்கின்றது.

சாலினி

# SAB BUSINESS SYSTEMS LIMITED

## CANON COPIERS

## CANON FAX

## CANON PRINTERS

## COMPUTERS

# SALES & SERVICE

NEW & REFURBISHED

## SAB BUSINESS SYSTEMS LTD

28 AMBERLEY GARDENS, EPSOM SURREY, KT19 0NH
TELEPHONE : 0181 786 8083 FACSIMILE : 0181 224 5283
E- MAIL: MANO @ MAIL.PRO-NET.CO.UK
MOBILE: 0860 904467

# யாதனை இதற்கு நேரா இயம்புவது?



க. உமாமகேசுவரன்



மாவண்டூரிலே ஒரு கொல்லுலைக் களம். உரிமையாளன் சிங்கன். தன் தொழிலிலோ அவன் ஈடிணையற்றவன்.

புலவன் ஒருவனுக்கு உடனே ஓர் எழுத்தாணி வேண்டும். அவன் மாமண்டூர்க் கொல்லுலைக் களத்துக்கு விரைகின்றான். எத்துணைக்கு எத்துணை தொழிலில் நிபுணனோ அத்துணைக்கு அத்துணை காலங்கடத்துவதிலும் சிங்கன் நிபுணன். புலவன் மெதுவாகப் பேச்சை ஆரம்பிக்கிறான். காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்கான சூட்சுமந் தெரிந்தவனின் சொக்கவைக்கும் பேச்சு அது.

நீண்டதொரு வரிசை நிற்கிறது. வரிசையிலே நிற்பவர் அத்தனைபேரும் கடவுளர். வரிசையின் தொடக்கத்திலே நிற்பவர் மகாவிஷ்ணு. கருடன் அவரைக் கடுகதியிற் கொண்டுவந்து சேர்த்துவிட்டது போலும்.

"சக்கரம் ஒன்று வேண்டும் என்றேனே! வேலை முடிந்துவிட்டதா? எத்தனை நாள்தான் நான் அலைவது?" – அழாத குறையாகக் கெஞ்சுகிறார் அவர்.

*"ஆழியான் ஆழி"* என்பான்.

அடுத்து நிற்பவர் பிரமா." அத்தனை ஜீவராசிகளினதும் தலைமிலே எழுதுவதென்பது எளிதான வேலையா என்ன? போதாததற்கு எழுத்தாணியின் முனை வேறு எழுதி எழுதித் தேய்ந்துவிட்டது. எழுதவே முடியவில்லை. எழுத்தாணி ஒன்று வேண்டும் என்றேனே! ஒரு சின்ன எழுத்தாணிக்காக இப்படி அன்னந்தண்ணீர் இன்றி அன்னத்தில் ஏறி அலையவேண்டும் என்று என் தலை நான்கிலும் எழுதித் தொலைத்திருக்கிறதே!" என்று அங்கலாய்க்கிறார்.

"அயன் எழுத்தாணி என்பான்."

"கிரௌஞ்சம் என்ற குன்றைப் பிளக்கவேண்டும், அதற்கோர் வேல் வேண்டும். எத்தனை தரம்தான் நான் அலைவது, கேட்பது, அலுத்துவிட்டேன்" – சேவற்கொடியோனான குமரன் தன் பங்குக்குக் குமுறுகிறான்.

"கோழியான் குன்றெறிய வேல் என்பான்."

"என்றோ கொடுத்தேன் என் மழுவை. போகட்டும். இன்றாவது அதைத் திருப்பித் தரக்கூடாதா? ஐயோ! எங்கேயென் மழு?" என்றவாறு நெருப்புக் கண்ணான நெற்றிக் கண்ணிலும் நீர் வடியும் நிலையில் இரந்து நிற்கிறான் உருத்திரன்.

"பூழியான் எங்கென் மழுவென்பான்."

"ஓகோ! அப்படியானால் தேவ கம்மியனான விஸ்வகர்மாவினுடைய உலைக் களத்திலேதானே இப்படியெல்லாம் நடக்கிறது" என்று இடைமறித்தான் சிங்கன். " சிங்கா! அங்கே போய் நிற்க தேவர்களுக்கென்ன பைத்தியமா? இதெல்லாம் இந்த மாவண்டூர் உலைக்களத்திலேதான்! " என்ற புலவன் பாடவே ஆரம்பித்துவிட்டான்.

ஆழியான் ஆழி அயன்எழுத் தாணியென்பான்
கோழியான் குன்றெறிய வேல்என்பான் – பூழியான்
எங்கென் மழுஎன்பான் என்றும்அந்த மாவண்டூர்ச்
சிங்கன் உலைக்களத்தே சென்று

மாவண்டூர் உலைக்களத்தில் முன்றிலிலே மும்மூர்த்திகள். காரியம் ஆவதற்காக காலமெலாம் காத்திருக்கவும் அவர்கள் தயார். "எப்படிப்பட்ட கைவினைஞன் சிங்கன் என்பது இப்போது புரிகிறதா?" என்று புலவன் முத்தாய்ப்பு வைத்ததும் சிங்கனுக்கு உள்ளங்காலில் இருந்து உச்சிபரியந்தம் தானா அதற்கு மேலும் குளிர்ந்துவிட்டிருக்கும். புலவனுக்கு ஓர் எழுத்தாணியை அடித்துக் கொடுத்துவிட்டுத்தான் மறுவேலை பார்த்திருப்பான் என்று சொல்லத்தேவையில்லை. தன் அலுவலை நிறைவேற்றிக் கொள்வதற்காகச் சிங்கனை உயர்த்தவேண்டும் என்ற அவசரத்திலே முருகப்பெருமானின் வேலைச் செய்தவனே மாவண்டூர்ச் சிங்கன் தானோ என்ற மயக்கத்தையே எழுப்பிவிட்டான் புலவன். இதைக் கேட்க நேர்ந்திருந்தால் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளுக்கு எப்படி இருந்திருக்குமென்று சொல்லவேண்டியதில்லை.

சூரபத்மன் சுப்பிரமணிய சுவாமியை எதிர்த்துப் போர் புரிகின்றான். மாமரமாகி நின்று மருட்டப்பார்க்கின்றான். சுப்பிரமணிய சுவாமி தம்முடைய ஒப்பற்ற படைக்கலத்தை – ஞானவேலை –பிரயோகிக்கப்போகின்றார். இந்தச் சந்தர்ப்பத்தை விட்டுவிட்டால் வேலைப்பற்றி பேசுவதற்கான மற்றொரு சந்தர்ப்பம் வாய்ப்பது அரிது.

இந்த வேல் எப்படி உருவாயிற்று ? எந்த உலைக்களத்திலே இது தயராயிற்று? என்று கேள்வி மேல் கேள்வியாக அடுக்கிவிட்டு சுவாமிகள் பேச ஆரம்பிக்கின்றார்கள்.

" பாற்கடலைக் கடைந்த போது ஆலகால விஷம் கிளம்பிற்று. அதை அப்படியே திரட்டிச் சிவனின் நெற்றிக்கண் நெருப்பின் வெம்மையையும் ஆற்றலையும் சிறிதே ஊட்டி, நடராஜ மூர்த்தியின் இடது திருக்கரத் தீயிலே தோய்த்து, ஒரு வேலைச் செய்திருந்தால் (அப்படி ஒரு பொருள் இல்லை. இல்லாத அந்தப் பொருளை இருப்பதாக வைத்துக் கொண்டு உவமை*யாக்கினால் ) அந்தக் கற்பனை வேல் போல இருக்கும் இந்த முருகன் கைவேல் " என ஒருவாறு (சத்தியமாக ஒருவாறுதான் ) தாம் வேலைப் பற்றி மிக எளிமைப் படுத்திச் சொல்லிப் புரியவைத்துவிட்ட குதூகலம் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளுக்கு. அதே வேளை, சுப்பிரமணிய சுவாமியை மாவண்டூர்ச் சிங்கன் கொல்லுலைக்களத்திலே காத்திருக்கவைத்த அந்த அசட்டுப் புலவனிடம் இருந்து, நாம் காப்பாற்றப்பட்டு விட்டதான களிப்பு நமக்கு.

விடம்பிடித் தமலன் செங்கண்
வெங்கனல் உறுத்திப் பாணி
இடம்பிடித் திட்ட தீயிற்
றோய்த்துமுன் இயற்றி யன்ன
உடம்பிடித் தெய்வம் இவ்வா
றுருகெழு செலவிற் சென்று
மடம்பிடித் திட்ட வெஞ்சூர்
மாமுதல் தடிந்த தன்றே!
(பாணி–கை, உடம்பிடி – வேல்)

அந்தப் புலவன் தன் காரியம் ஆகவேண்டும் என்பதற்காகச் சிங்கனை உயர்த்த வேண்டும் என்று கருதினான். முருகனையே அவன் வாசலிலே காக்கவைத்தான். கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளுக்குத் தன் காரியம் எதையும் நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்ற சுயநலம் சிறிதும் இல்லை. பிழைக்கத் தெரியாத அப்பாவி. எனவே இந்த வேலை வைத்துக்கொண்டு கந்தபுராணமாகிய சைவத்தமிழ்க் காப்பியத்திலே காப்பியகதா சம்பவத்துக்குப் புறம்பாக –இடைப் பிறவரலாக –அரியதொரு கருத்தைக் கூறிவிடலாமே என்று நினைக்கிறார்.

ஆஹா! இந்த வேலுக்கு நிகரானது என எதனைச் சொல்வது? 'யாதனை இதற்கு நேரா (நிகராக )

* அணி இலக்கணக்காரர் இதனை ***இல்பொருள் உவமை*** என்பர்

இயம்புவது?" என்று திகைப்பது போல ஒரு கணம் நமக்குப் போக்குக் காட்டுகின்றார். அடுத்த கணம் தாம் அதைக் கண்டுபிடித்துவிட்டதான களிப்போடு துள்ளிக்குதிக்கின்றார். எல்லாம் வெறும் நடிப்பு ஐயா நடிப்பு. தேவர்கள் விதம் விதமான ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள் அல்லவா? ஆனால் அவர்கள் மனமோ வேதனையால் நிரம்பி வழிகின்றது. "பேடி கைவாள்" போல அவர்களது ஆயுதங்கள் பயனற்றவை. அவை வேலுக்கு நிகராவது ஏது?

பூதனை என்ற அரக்கி திருமாலின் அவதாரமான கண்ணனைக் கொல்வதற்கென கம்ஸனால் ஏவப்பட்டாள். கண்ணன் என்ற பிஞ்சுக் குழந்தைக்கு பாலூட்டுவதாக அவள் பாசாங்கு பண்ணினாள். பாலுக்குப் பதில் நஞ்சைப் பீச்சினாள். கள்வனான கண்ணன், பால் குடிப்பதுபோல, அவள் உயிரையே குடித்துவிட்டான். அத்தகைய திருமாலையே இரத்ததானம் செய்யப் பணித்து வலிகெடுத்தவன் வைரவமூர்த்தி . பிரம்மாவின் தலையைக் கிள்ளித் தருக்கடக்கியவனும் அவனே! அவனுடைய சூலமல்லால் யாதனை இந்த வேலுக்கு நிகராகச் சொல்வது. முருகப்பெருமானுடைய வேல் வைரவப்பெருமானுடைய சூலத்திற்கு நிகரானது என்ற சமன்பாட்டின் மூலம் வைரவமூர்த்தி சுப்பிரமணியசுவாமி என்பதெல்லாம் ஒரே மூர்த்தியின் நாமரூப பேதங்களே.! *ஒன்றே உட்பொருள் ஞானிகள் அதைப் பலவாறாக குறிப்பிடுவர்* என்றெல்லாம் முருகன் கைவேலை வைத்துக்கொண்டே சிந்திக்கும் வேலையை நமக்கு வைத்துவிட்டார் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்.

வேதனை அகத்த ராகும்
விண்ணவர் படைகள் தம்மில்
யாதனை இதற்கு நேரா
இயம்புவ தெரிமிற் றோன்றி
பூதனை உயிருண் கள்வன்
புண்டரி கத்தன் வாய்மை
சோதனை புரிந்த மேலோன்
சூலமே என்ப தல்லால்

காரிய சாதகத்திற்காக மாவண்டூர்ச் சிங்கன் என்ற தொழில் வல்லுநனைப் புகழ ஆரம்பித்த புலவன் ஒருவன் * " வேல் ஒன்று கொடு" என்று குமரன் கேட்பதே சிங்கனிடம் தான் என்று மிக எளிதாகச் சொல்லிவிட்டான். அப்படி அநுசிதமாக அபசார வார்த்தைகளைத் தன் சுயநலத்திற்காக உதிர்க்கத் தெரியாத கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் வேலை வைத்துக்கொண்டு *ஏகம் சத்விப்ரா பகுதா வதந்தி* என்ற ஆப்தவாக்கியத்திற்கு அரியதொரு உரையே விரித்துவிட்டார்.

கந்தபுராணம் நமக்கு வாய்த்த அற்புத கற்பகம். அது கற்றனைத்தூறும் அருளமுதக் கேணி, வெறும் மணற்கேணி அன்று!.

* ***கம்பன்*** தான் அவன் என்று சத்தியம் செய்கிறது ***தனிப்பாடற்றிரட்டு***

## பிள்ளையார் பட்டி பிள்ளையார்



காரைக் குடியில் இருந்து திருப்பத்தூர் செல்லும் வழியில் குன்னக்குடி அருகே உள்ள பிள்ளையார் பட்டியில் கோயில் கொண்டுள்ள பிள்ளையார் பல தனிச்சிறப்புகளைக் கொண்டுள்ளவர். கஜமுகாசுரனை வதம் செய்து விட்டு தந்தையாரான சிவபெருமானை வழிபடும் நிலையில் உள்ள பிள்ளையார், சிரசில் சடாமுடியுடனும் வடதிசை நோக்கி அமர்ந்த பத்மாசனக் கோலத்திலும் வலப்புறமாக சுழன்ற துதிக்கையோடும் காட்சியளிக்கிறார். ஒரு கரத்தில் சிவலிங்கமும் மறுகரத்தில் மலரும் ஏந்தி இரண்டு திருக்கரங்களுடன் விளங்கும் பிள்ளையார் பட்டிப் பிள்ளையாருக்கு வினாயக சதுர்த்தியின்போது தேர் உற்சவத்துடன் கூடிய பத்துநாள் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

# ஐயம் தீர்க்கும் அறிவுரைகள்

## சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள்

கோயில் ஏன்? என்பது பற்றியும் அங்கு நடைபெறும் நித்திய நைமித்திய பூசைகள் பற்றியும் விளக்கம் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த இதழில் கோயில் பூசைகளில் காட்டும் தீபங்கள், சோடச உபசாரங்கள் பற்றிக் கேட்கப்படுகின்றது.

**கோயிலில் அடுக்குத் தீபம் என்ற பல விளக்குகள் உள்ள தீபத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து ஒற்றைத் தீபம்வரை காட்டப்படுகின்றதே! அதனுடைய விளக்கம் என்ன?**

கோயிற் பூசைகளில் தீபம் முக்கிய இடம் வகிக்கிறது. முன்பு குறிப்பிட்டதுபோல கோயில் பஞ்ச பூத சேர்க்கைகள் கூடிய இடம். ஆகையால் விளக்கு தீயினுடைய சார்பில் முக்கிய இடம் வகிக்கிறது. இறைவனுடைய அபிஷேகத்தில் ஜலம் எவ்வளவு முக்கியமோ அதுபோல பூசையில் தீபம் முக்கியமாகிறது. தீப ஆராதனை அக்கினி தத்துவத்தைக் குறிக்கிறது. தீப ஆராதனையில் பல வகை உண்டு. முதலில் அடுக்குத் தீபத்தை எடுத்துக்கொண்டால் மூன்றிலிருந்து பதினொன்று வரை அதாவது 3, 5, 7, 9 என்று படிப்படியாக இருக்கிறது. இதற்கென்று கணக்கு உள்ளது. மொத்தமாக 34, 36, 108 என்று தீபங்கள் எரியும். அடுக்குத் தீபத்தை அடுத்து நாக தீபம், புருஷாமிருக தீபம், மயூர தீபம், கைலாச தீபம், மேரு தீபம் என்று வகை வகையான தீபங்கள் காட்டுவதுண்டு. திரை விலகி தீபம் காட்டும்போது தேவர்கள், மனிதர்கள், மிருகங்கள் என்கிற மூவகையினரும் அக்கினி சம்பந்தமான வழி பாட்டை செய்வதைக் குறிப்பதுதான் தீப ஆராதனை.

அடுக்குத் தீபத்தை அலங்கார தீபம் என்று சொல்லப்படும். அதை ரதஹாரத்தி என்றும் சொல்வர். ரதம் என்றால் தேர். இறைவன் எல்லா ஜீவராசிகளிலும் இருக்கிறார் என்பதை தேரிலே பல உருவங்கள் இருப்பதன் மூலம் பிரதிப லிக்கப்படுகிறது என்பதை முன்பு விளக்கியுள்ளேன். அதுபோல எல்லா ஜீவராசிகளையும் பிரதிபலிப்பதாக அடுக்குத்தீபம் காட்டப்படுகிறது. எல்லா விலங்கினங்களையும் ஊர்வன, பறப்பன, விலங்கினம் என்று பிரிக்கிறோம். ஊர்வன என்பதின் பிரதிநிதியாக சர்ப்பம் (பாம்பு), பறப்பன சார்பில் மயூரம் (மயில்), விலங்கின சார்பில் ரிஷபம் (இடபம்) என்றும் தேவர் மனிதர் சார்பில் புருஷாமிர்கம் (கால் மிருகம் போலவும் தலை மனிதர் போலவும் இருப்பது) மலை சார்பில் மேரு தீபம், நட்சத்திரம், ஆகாசம் சார்பில் நட்சத்திர தீபம், சூரிய தீபம், சந்திர தீபம் என்று நிறைய தீபங்கள் உண்டு. இது தவிர சுவாமிக்கும் ஐந்து முகங்களுண்டு. நமது சைவ சமயத்தில் முக்கிய வழிபாட்டுக் கடவுளாகிய சிவனுக்கும் ஐந்து திரு முகங்கள். அதைக் குறிப்பதாக ஐந்து அடுக்கு தீபங்கள் காட்டுவதுண்டு. இவற்றிற்கு மேலாக ஆத்ம ஜோதியும் இறைஜோதியும் கலப்பதைக் குறிப்பதாக தீப ஆராதனை காட்டுவது முக்கியமாகிறது. தீபாராதனை நெய்யிலே செய்வது உத்தமமானது. தற்காலம் கால நேர மாற்றங்களுக்கு ஏற்றவாறு நல்லெண்ணை, இலுப்பை நெய், கடலை நெய், தேங்காய் நெய் ஆகியவற்றினால் தீபம் ஏற்றுகிறார்கள். பெரிய தீபங்கள் மிகவும் விசேடமான தினங்களில் மட்டுமே காட்டப்படும். சாதாரண நாள்களில் அலங்கார தீபம், பஞ்சமுக தீபம் ஆகியவற்றை மட்டும் காட்டி சுருக்கமாகச்

செய்வதுண்டு.

**தீப ஆராதனையைத் தொடர்ந்து கொடி, குடை, சாமரம் போன்ற உபகரணங்கள் காட்டப்படுகின்றன. இதை சோடச உபசாரம் என்பார்கள். அதனுடைய கருத்து என்ன?**

சோடச உபசாரம் என்பது பற்றி மிகவும் விளக்கமாக எழுதவேண்டும். சோடச உபசாரத்தில் இரண்டு வகை உண்டு. சுவாமிக்கு ஆவாகனத்திலிருந்து ஆரம்பித்து தீப ஆராதனை வரை சோடச உபசாரம் இருக்கிறது. அதிலே அபிஷேக அலங்காரம் எல்லாம் உள்ளடங்கும். ஆவாகனம், ஆசனம், பார்த்தியம், ஆசமனீயம், ஸ்நானம், வஸ்திரம், நைவேத்தியம், தூபம், தீபம், உபசாரம் என்று பதினாறு வகையான உபசாரங்கள் உண்டு. அடுத்து தீப ஆராதனையிலும் பதினாறு உபசாரங்கள் உண்டு. அதிலே முதற் கேள்வியில் குறிப்பிட்டது போல தீபங்கள் காட்டி பின் குடை, கண்ணாடி, விசிறி, சாமரம் என்று ஒருவகை சோடச உபசாரம் உண்டு. நீங்கள் கேட்பது தீபாராதனையின் பின் வரும் சோடச உபசாரம். இதிலே கண்ணாடி, குடை, விசிறி, ஆலவட்டம், சுருட்டி, சாமரம் ஆகியவை காட்டுவது. இவை எல்லாம் மரியாதைக்குரிய மங்களமான கருவிகளாகக் கருதப்படுவதால் சுவாமிக்கு உபசாரமாக அமைகின்றன். தீப ஆராதனையில் எப்படி அக்கினி சம்பந்தமான உபசாரம் சுவாமிக்குப் பண்ணு கிறோமோ அதுபோல இதனால் வாயு சம்பந்தமான உபசாரம் பண்ணுகிறோம். விசிறி, ஆலவட்டம் எல்லாம் வாயு சம்பந்தமானவை. அதோடு சேர்த்து குடை, கண்ணாடி போன்றவற்றையும் காட்டுகிறோம். பொதுவாக சுவாமியும் ஆத்மாவும் ஒன்றுதான். எதை எதையெல்லாம் கௌரவ மானவை என்று நாம் நினைக்கிறோமோ அதை சுவாமி முன்னிலையில் காண்பிக்கிறோம்.

அந்தக் காலத்தில் நிர்த்தம் (நடனம்) கூட சுவாமி எதிரில் நடந்ததுண்டு. பணிப்பெண்கள் இருந்த காலத்தில் ஆசாரியர் உபசாரம் பண்ணும் அதே வேளை அவர்களும் நடன முத்திரைகளைக் காட்டி உபசாரம் செய்வார்கள் என்று கேள்விப்பட்டதுண்டு. அதுதவிர இந்த உபசாரத்தில் ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட கருத்தும் உண்டு. உதாரணமாக சாமரம் என்று எடுத்துக்கொள்வோம். இறைவன் முன்னிலையில் அது உபசாரமாக வீசப்படுகிறது. அந்தக் காலத்தில் அரசனுக்கு முன்னும் சாமரம் வீசியிருக்கிறார்கள். சாமரம் கவரிமான் முடியினால் செய்யப்பட்டது. கவரிமான் ஒரு முடி இழந்தாற்கூட தன் உயிரைத் தியாகம் பண்ணிவிடும் என்பார்கள். அதுபோல அரசன் தனது நீதியில் சிறிது தவறினாலும் இருக்கக்கூடாது என்பதை அரசனுக்கு எடுத்துக்காட்டவே, கவரிமான் மாதிரி உயிர்வாழ வேண்டும் என்றும் அறிவுறுத்துவதற்காக சாமரம் காட்டுவதாகக் கூறுவார்கள்.

**முத்திரைகள் பற்றிக் குறிப்பிட்டீர்கள். ஹோமம் செய்யும்போதும் வேறு சில பூசைகள் செய்யும்போதும் முத்திரைகள் காட்டுவது, கையைச் சொடுக்குவது போல (சுண்டுவது) வருகிறதே! அவற்றின் விளக்கமென்ன?**

பூசை செய்யும்போது ஒரு நல்ல ஆசாரியார் மூன்று விஷயங்களில் மிகக் கவனம் செலுத்தவேண்டும். அவை மந்திரம், கிரியை, பாவனை என்பன. பூசைக்கு மட்டுமன்றி பொதுவாக எந்தக் காரியம் செய்தாலும் இவை மூன்றும் முக்கியமானவை. மந்திரம் என்பது வாயினால் மந்திரங்களைச் சொல்வது. வீட்டுக்கு ஒருவர் வந்தால் அவரை "வாங்க" என்று அழைக்கிறோம். சாதாரண வாழ்க்கையில் நாம் இன்னொருவரோடு பேசுவது பேச்சு. அதையே இறைவனோடு சம்பந்தப்படுத்தும் போது அது மந்திரம். அடுத்தது கிரியை. கிரியையிலேதான் முத்திரைகள் வருகின்றன. முதற் சொன்ன உதாரணத்திலே ஒருவர் வீட்டுக்கு வரும்போது "வாங்க" என்று வாயாலே கூப்பிட்டால் மட்டும் போதாது. கையைக் காட்டி வாங்க என்கிறோம். இது கிரியை. அடுத்தது பாவனை.

நாம் யாரைக் கூப்பிடுகிறோமோ அவர்களுக்குத் தகுந்த மாதிரி பாவனை இருக்கவேண்டும். ஒரு பையன் வரும்போது "இங்கே வா" என்று நிமிர்ந்து நின்று கூப்பிடுவோம். அதையே ஒரு பெரிய மனிதர் வரும்போது உடலை வளைத்து "வாங்க" என்று உபசரிப்போம். அதிலே பாவனை வித்தியா சமாகின்றது. அதுபோல இறைவனுக்குப் பூசை செய்யும்போதும் உள்ளன்போடு மனதில் இருந்து வரவேண்டும். மந்திரம் வாயினாலே சொல்ல வேண்டும். கிரியை கையினாலே காண்பிக்க வேண்டும். பாவனை மனதினாலே தெரியப்படுத்த வேண்டும். இந்த மூன்றையும் இணைத்துப் பூசை செய்தால் மட்டுமே சுவாமிக்கும் திருப்தி ஏற்படும். வெளியேயும் பூசை பரிமளிக்கும்.

இதிலே மந்திரம் வாயாலே சொல்லிவிடுகிறோம் என்று குறிப்பிட்டேன். கிரியை என்றால் என்ன? கோயிலிலே அஷ்டோத்திரம் (108 நாம அர்ச்சனை) செய்கிறோம். புஷ்பத்தை எடுத்துப் போடுகிறோம். ஓம் கணபதயே நம என்று சொல்லும்போது கை தானாக புஷ்பத்தை எடுத்துப்போடுகிறது. அந்த புஷ்பத்தைப் போடுவது கிரியை. ஹோமம் செய்யும்போது ஸ்வாஹ என்கிறோம். கை தன்னாலே நெய்யை எடுத்து ஹோமத்தில் விடுகிறது. இது கிரியை. ஆகமத்திலே, ஒவ்வொரு பூசைக்கும் சில கிரியை விதிமுறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆவாகனம் என்றால் சுவாமியை ஓரிடத்தில் அழைத்து நீ இங்கே இரு என்று இருத்துவதுபோல மஞ்சளிலே பிள்ளையாரைப் பிடித்து வைத்துவிட்டுப் பிள்ளையாரை அழைத்து, "அஸ்மின்னு ஹரித்ரா பிம்பேஸ்முகம் விக்னேஸ்வரம் த்யாயாமி, ஆவாகயாமி" என்று வடமொழியிலே சொல்கிறோம். அப்படி ஆவாகனம் செய்வதற்கு ஒரு முத்திரை. அதுபோல ஸ்தாபனத்துக்கு ஒரு முத்திரை. ஸந்நிதானத்துக்கு ஒரு முத்திரை. ஸந்நிரோதனத்துக்கு ஒரு முத்திரை. திக் பந்தனத்திற்கு ஒரு முத்திரை. திக்பந்தன முத்திரைதான் விரலைச் சொடுக்கும் முத்திரை. திக்பந்தனம் என்றால் ஆத்ம ரக்ஷை என்று சொல்வது. தன்னைக் காத்துக்கொள்வது. இதற்கு சாதாரணமாக புரியக்கூடிய ஓர் உதாரணம் சொல்கிறேன். ஒரு T.V யை புதிதாக வாங்குகிறோம். அதிலே ஒரு குறிப்பிட்ட நிலையத்திலிருந்து ஒளிபரப்பும் நிகழ்ச்சியைப் பார்க்க வேண்டுமானால் search பண்ணுகிறோம். அந்த நிலையம் வந்தவுடன் ஒரு பட்டனை அழுத்தி சேகரிக்கிறோம். அதிலே அந்த நிலையம் பதிவாகிறது. கம்பியூட்டரிலும் ஒரு வேலை செய்துவிட்டு "சேவ்" என்ற பட்டனை அழுத்தியதும் அது பாதுகாத்து வைத்திருக்கிறது. அதை எப்போதும் உபயோகிக்க முடியும். அதுபோல் சுவாமியை ஆவாகனம் செய்து ஸ்திரமாகப் பதிப்பது திக்பந்தனம். உட்கார வைப்பதற்கு முத்திரை உள்ளதுபோல எழுப்பி அனுப்பவும் முத்திரை உண்டு. அது சந்நிரோதனம் எனப்படும். "யதாஷ்டானம் பிரதிஷ்டாமி" என்று சொல்லும்போது நிரோதார்க்கியம் என்பது - இருங்கோ என்று சொல்வது, பராமுகார்க்கியம் என்பது - இனி நீங்கள் புறப்படலாம் என்பது போல. ஆக கை சொடுக்குவது திக்பந்தன முத்திரை.

ஒவ்வொரு சுவாமிக்கும் தனித்தனியே முத்திரைகளும் உண்டு. தேனு முத்திரை என்பது பசுமாட்டின் மடிபோல் உள்ள முத்திரை. நான்கு விரல்களைச் சேர்த்துக் காட்டுவது. அம்பாளுக்கு யோனி முத்திரை. வருணன் என்றால் மகர முத்திரை. விநாயகர் என்றால் அங்குச முத்திரை. முருகனுக்கு ஷண்முகி முத்திரை என்று பல முத்திரைகள் உண்டு. இப்படி இதுபற்றிச் சொன்னால் பதில் மிக நீண்டுவிடும். பொதுவாக வீட்டுக்கு வருபவரை வாருங்கோ, இருங்கோ, காப்பி சாப்பிடுங்கோ என்று உபசரிப்பதுபோல, தெய்வத்துக்குச் செய்யும் உபசாரங்களைத்தான் இந்த முத்திரைகள் குறிப்பிடுகின்றன.

இப்பகுதிக்கு வாசகர்களிடமிருந்து வினாக்கள் வரவேற்கப்படுகின்றன. உங்களுடைய வினாக்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

EDITOR KALASAM
42, STONELEIGH ROAD
CLAYHALL, ILFORD
IG5 OJD

# துன்பத்திலிருந்து எப்படி விடுபடுவது?

பழைய காலங்களில் எது எது எங்கெங்கு இருக்கவேண்டுமோ, அது அது அங்கங்கே இருந்தது.

இப்போதோ கழுதை கட்டிலில் படுத்திருக்கிறது! யானை தொட்டிலில் தூங்க ஆசைப்படுகிறது. பூனை புல்லாங்குழல் வாசிக்க விரும்புகிறது. புள்ளிமான் உப்புக்கண்டமாகிறது.

நாகரிகத்திலேயே தர்மம் தடம் புரளுமானால், நாத்திகத்தின் விளைவு என்ன?

எனக்குத் தெரிந்தவரை, நாத்திகம் பேசிய உண்மையானவர்களில் பலர் சொத்தை இழந்தார்கள்.சில உத்தமர்கள் தம் பெண்டாட்டியை இழந்தார்கள்.

அக்கிரமக் காரர்கள் மட்டும்தான் அனுபவித்தார்கள். பூசை அறைக்கும், குளிக்கும் அறைக்கும் பேதம் தெரிந்தவன், ஆத்திகன்

எதுவும் தாரந்தான் என்று கருதுகின்றவன் நாத்திகன்.

தர்மம் தர்மம் என்று பயப்படுகின்றவன் ஆத்திகன். அநுபவிப்பதே தர்மம் என்று நினைப்பவன் நாத்திகன்.

ஆத்திகன் மனிதனாக வாழ்ந்து தெய்வமாகச் சரிகிறான்.

நாத்திகன் மனிதன் போலக் காட்சியளித்து மிருகமாகச் சாகிறான்.

உண்மையிலேயே ஒருவன் நாத்திகம் பேசினால் அவன் உணர்ச்சியற்ற ஜடம். ஆராயும் அறிவற்றமுடம்.

பகுத்தறிவு ஒழுங்காக வேலை செய்யுமானால், அது கடைசியாக இறைவனைக் கண்டுபிடிக்குமே தவிரச் சூனியத்தைச் சரணடையாது.

சனற்குமாரர் என்ற மகாயோகியை நாரதர் "அணுகி ஐயனே எனக்கு உபதேசம் செய்ய வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

" நல்லது நாரதா! உபதேசம் செய்வதற்கு முன்னால் ஒரு வார்த்தை. உனக்கு ஏற்கனவே என்னென்ன தெரியும் என்பதை முன்கூட்டியே சொல்லிவிடு அதன் பிறகுதான் எதை உபதேசிக்க முடியும் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்." என்றார் சனற்குமாரர்.

நாரதர் தான் கற்ற வித்தைகளைக் கூறத் தொடங்கினார்.

" குரு தெவா எனக்கு ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள் தெரியும். இதிகாச புராணங்கள் தெரியும்.வேதங்களின் வேதமாகிய இலக்கணம், பிதுரு, கல்பம், கணித சாஸ்திரம், சகுன சாஸ்திரம், நீதி சாஸ்திரம் ஆகிய அனைத்துமே தெரியும் என்றார்.

அப்படிச் சொன்ன நாரதர் தன் சந்தேகம் என்றையும் தெளிவு படுத்தினார்.

தேவா இவ்வளவு மந்திரங்களை நான் கற்றுக் கொண்டேனே தவிர துன்பங்களைக் கடந்து செல்லும் ஆத்மயோகத்தை அறிந்தவனாக இல்லை.தயை கூர்ந்து எனக்கு நீங்கள் துன்பத்தைக் கடக்கும் மார்க்கத்தைக் கற்றுத் தரவேண்டும்."

" நாரதரே நீர் கற்றுக் கொண்டவைகள் பெயரளவில் வித்தைகளே. அவற்றைவிடப் பெரிய விடயங்கள் உண்டு. அவற்றின் மூலமே ஆத்மாவை அறிய முடியும்."

" எவை எவை பெரியவை?"

"வாக்குப் பெரியது. வாக்கைவிட மனது பெரியது. எப்படி ஒரு கைப்பிடிக்குள் இரண்டு நெல்லிக்காயோ இலந்தைப் பழமோ அடங்கிவிடுகிறதோ, அப்படியே பெயரும் வாக்கும் மனதுக்குள் அடங்கிவிடும். ஆகவே மனதை நேசிப்பாயாக.சங்கற்பம் செய். உடனே மனம் பேச ஆரம்பிக்கும்.அது வாக்கு . அந்த வாக்கு மந்திர வடிவமாகிறது. சங்கற்பத்தைக் காட்டிலும் தியானம் பெரியதுபூமி தியானம் செய்கிறது. வானம் தியானம் செய்கிறது.

**கவிஞர் கண்ணதாசன்**

# K.R. GIFT SHOP

உங்களுக்குத் தேவையான
இந்திய எவர்சில்வர் பாத்திரங்கள்
வீட்டுப் பாவனைப் பொருட்கள்
சமையற் பாத்திரங்கள்
பூசைத் திரவியங்கள், மின்சாரப் பொருட்கள்
ஆடம்பரப் பொருட்கள்,
திருமணப் பரிசுப் பொருட்கள்
பல்வேறுவிதமான பட்டாசு வகைகள்
வாழ்த்து மடல்கள், ராக்கிகள், கரம் போட்
இந்தியப் புத்தகங்கள், கைக்கடிகாரங்கள்

ஆகியவற்றுக்கு நீங்கள் நாடவேண்டிய
ஒரே விநியோகஸ்தர்

**K.R. GIFT SHOP**
**378 ROMFORD ROAD**
**LONDON E7 8BS**
**TEL: 0181 470 0486**



# DLA



**DISABILITY LIVING ALLOWANCE**

**DO YOU HAVE DIFFICULTIES WITH WALKING, CHEST DISCOMFORT, CHEST PAIN AND BACK PAIN ?**

**DO YOU HAVE SEVERE MENTAL IMPAIRMENT WITH BEHAVIOURAL PROBLEMS?**

**IF YOU SAY YES THEN**
**YOU CAN CLAIM:**
**DLA if you are under 66 OR**
**ATTANDENCE ALLOWANCE if you are over 66**

**Also advice available on**
* WELFARE BENEFITS
*SOCIAL FUND
*HOUSING BENEFITS
* COUNCIL HOUSING APPLICATION RELATED MATTERS

**Please phone us on**
**0181 550 0908 or 0181 548 8808**


# கலசம் சந்தாப் படிவம்

அன்புடையீர்,

கலசம் சஞ்சிகையை தொடர்ந்து இரண்டு வருடங்களுக்குப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றேன். இத்துடன் அதற்கான (பவுண்கள்) பெறுமதியான காசோலையை அனுப்பி வைக்கின்றேன்.

**NAME** : ____________________

**ADDRESS** : ____________________

____________________

____________________

(காசோலைகள் **SMS (UK)** என்ற பெயருக்கு எழுதப்படுதல் வேண்டும்)

2 வருடம் : **10.00** பவுண்கள்
(பிரித்தானியா)
2 வருடம் : **14.00** பவுண்கள்
(ஐரோப்பா






உங்களுக்குத் தேவையான
தமிழ், ஆங்கில சஞ்சிகைகள்
தமிழ், ஹிந்தி, ஆங்கில வீடியோ, ஓடியோக்கள்
மற்றும் இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்ட
உணவுப் பண்டங்கள்
உடன் மரக்கறி வகைகள்
ஆகியவற்றை மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
கொள்வனவு செய்வதற்கு
நம்பிக்கையோடு அணுகவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

**249-251 FORE STREET, EDMONTON,**
**LONDON N18**
**TEL : 0181 884 4979**
**FAX : 0181 345 6317**

25 புதுக் கடை, பலாலி வீதி, திருநெல்வேலி
யாழ்ப்பாணம், இலங்கை

THE MOST TRUSTED AND RELIABLE NAME IN THE TRADE

MAIN AGENT
PASSENGER
SALES
& AIR FREIGHT

# GLEN CARRIERS LIMITED

14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ
TELEPHONE: 0181 - 740 8379 0181- 749 0595
FAX: 0181 740 4229

# TRAVEL

**Most Competitive Rates to Colombo and Other Worldwide Destinations**

## AIR LANKA

| | |
|---|---|
| 40Kg Baggage Allowance | |
| 3 Months Validity | £410 |
| 1 Year Validity | £485 |

## AIR LANKA SPECIALS

From 08 - 29 Feb. No stopover in Colombo

| | |
|---|---|
| Madras | £375 |
| Bangkok, Singapore, Kuala Lumpur | £395 |
| Dubai | £320 |

## KUWAIT AIR

| | |
|---|---|
| 01 Jan - 30 Jun | £425 |
| 01 Jul - 31 Aug | £530 |
| 01 Sep - 30 Nov | £425 |

## BRITISH AIRWAYS

| | |
|---|---|
| 01 Jan - 30 Mar | £495 |
| 31 Mar - 04 Apr | £600 |
| 05 Apr - 14 Jun | £400 |
| 15 Jun - 10 Dec | £495 |

## GULF AIR

| | |
|---|---|
| 01 Jan - 30 Mar | £380 |

## ROYAL JORDANIAN

| | |
|---|---|
| 01 Jan - 30 Mar | £450 |

Other Airline Fares are Available on Request
Please Call us for Special Low Fares to Other Destinations.
All fares Exclude Airport Tax

COLOMBO-LONDON-COLOMBO
FARES FROM £510.00

# SHIPPING

Every third week we have a sailing to Colombo
**YOUR GOODS GO TO OUR BONDED WAREHOUSE IN COLOMBO**
**Tea Chest - £12.50**
**(£ 2.50 per cu. ft)**

Special rates for shipment of cars in containers £750.00

# AIR FREIGHT

(Send all your excess luggage by air)

| Colombo | Madras |
|---|---|
| Minimum charge £30.00 for 10Kgs | Minimum charge £65.00 for 25kgs |
| Additional £1.40 per kg | Additional £1.40 per kg |

- Collection of goods, packing and insurance can be arranged.
- Regular shipping and air freight services to Australia, Canada and other worldwide destinations.

# Yoge Empire Estates

# ஜோகி எம்பய எஸ்ரேற்ஸ்

## LANDLORDS!

### LETTING AND MANAGEMENT SERVICE

* ARE YOU WORRIED ABOUT YOUR RENT NOT PAID IN TIME ?

* HAVING PROBLEM WITH FINDING SUITABLE TENANTS?

**ALL TYPES OF PROPERTIES IN YOUR AREA ARE URGENTLY REQUIRED FOR AWAITING TENANTS**

- NO HIDDEN FEES
- ALL LOCAL AREAS COVERED

**TENANTS**
PROFESSIONALS
STUDENTS
DSS WELCOME

**CALL US NOW ON**

**0181 475 0015 (4 LINES)**
297 HIGH STREET NORTH
MANOR PARK
LONDON E12

*Your satisfaction is our Business !!*



சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் அச்சமைப்பும் வடிவமைப்பும் செய்யப்பட்டு, ஐரோப்பாவில் தரமான செல்வம் அச்சகத்தினரால் அச்சிடப்பட்டு சைவ முன்னேற்ற சங்கத்தால் 14.1.1996 அன்று வெளியிடப்பட்டது.